
# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

## திருப்பூர்






ஆண்டு மலர் 2021 - 2022



30-11-2021 முதல் 20-12-2021 வரை குவாலியரில் நடைபெற்ற அகில இந்திய மலையேற்ற பயிற்சியில் கலந்து கொண்ட இரண்டாம் ஆண்டு பொருளியல் துறை மாணவி CDT.மிருதுளா



12-07-2021 முதல் 16-07-2021 வரை கோவை காருண்யா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சுடும் பயிற்சி முகாமில் கலந்து கொண்ட நம் தேசிய மாணவர் படையினர்



18-11-2021 முதல் 30-11-2021 வரை 10 நாட்கள் பாலியல் வன்கொடுமைத் தடுப்பு மன்றம் மற்றும் மகளிர் மன்றம் சார்பாக நடைபெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்



12-11-2021 அன்று தமிழ் வளர்ச்சி துறை சார்பாக ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளையொட்டி திருப்பூர் மாவட்ட அளவில் நடந்த பேச்சுப் போட்டியில் முதல் பரிசு ரூ.5000/- பெற்ற இரண்டாம் ஆண்டு இளம் அறிவியல் வேதியியல் மாணவி சா.பிருந்தா



11-12-2021 அன்று பாரதியார் பல்கலைக்கழகத்தில் கல்லூரிகளுக்கு இடையிலான கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்று இளம் பாரதி விருது பெற்ற இரண்டாம் ஆண்டு இளம் வணிகவியல் மாணவி க.யுவஸ்ரீ



22-03-2022 அன்று தூய வளனார் தன்னாட்சி கல்லூரியில் திருச்சி மாவட்ட அளவில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற இரண்டாம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கிய மாணவன் ம.கவின்குமார்


# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

பாரதியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது

தேசிய தர மேம்பாட்டுக் குழு (NAAC)வின்

B மதிப்பு பெற்றது

கல்லூரி சாலை, திருப்பூர் - 641 602




# ஆண்டு மலர்

# 2021 - 2022

# மலர்க்குழு

## தலைவர்

முனைவர் வ.கிருஷ்ணன்

கல்லூரி முதல்வர்

\- - -

## முதன்மை ஆசிரியர்கள்

முனைவர் சி.அமிர்தராணி

வணிகவியல் துறை இணைப் பேராசிரியர்

திரு. இரா.செங்கமுத்து

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்

முனைவர் லா.ரூபி கிறிஸ்டி

ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர்

# மலர் முகம்

2021 - 2022 ஆம் கல்வி ஆண்டின் ஆண்டுமலர் இப்பொழுது உங்கள் கைகளில் தவழ்கிறது. இந்த மலரில் மாணவச் செல்வங்கள் தங்களுடைய எண்ணங்களை உணர்வுகளை, சமூகத்தில் நடைபெறும் அன்றாட நிகழ்வுகளை, இந்தச் சமூகம் மனதில் ஏற்படுத்திய ஆழமான வடுக்களை, உயிர் ஓவியங்களாகவும் சித்திர எழுத்துக்களாகவும் வடித்துள்ளனர். இலக்கியங்களை இயந்திரங்கள் பிரசவிப்பது இல்லை. ஏனெனில் இலக்கியம் என்பது உணர்வுகளின் வெளிப்பாடாகும். மனித உணர்வுகளை மனிதனால் மட்டுமே வெளிப்படுத்த முடியும். அந்த உணர்வுகளும் எழுத்துகளாக வடிவம்பெறும்பொழுது இலக்கியமாக உருவாகிறது. இம்மலரில் சமூகம், காதல், வீரம், அன்பு, பாசம் என்ற எண்ணற்ற மனித உணர்வுகள் பரவிக்கிடக்கின்றன. மாணவர்கள் தம் படைப்புகளைக் காணும்பொழுது, தம்மினும் தம்மக்கள் அறிவுடையோர் என்பதைக் காண முடிகிறது.


23ஆம் நூற்றாண்டின் அறிவியலின் அபார வளர்ச்சியும் தகவல் தொழில்நுட்பத்தின் புதுப்புது பரிமாணமும் உலகை உள்ளங்கைக்குள் சுருக்கி விட்டது எனலாம். இப்படிப்பட்ட வளர்ச்சிகள் யாவும் உயிர் உள்ளவைகளின் உணர்ச்சிகளை ஒருபோதும் பிரதிபலிக்க முடியாது. அதிலும் மனிதன் ஆறறிவு படைத்த அறிவு சுரங்கம், அவனது எண்ணங்கள் விரிவடைந்து கொண்டே இருக்கும். எந்தச் சூழ்நிலையிலும் அவனது எண்ணங்களை தாழ்ப்பாள் கொண்டு அடைத்து விட முடியாது. கலையும் இலக்கியமும் மானுடத்தில் உதிக்கும் மகத்துவங்கள். இம்மலரில் இடம் பெற்றுள்ள மாணாக்கர் மற்றும் பேராசிரியர்களின் படைப்புகளும் கைவண்ணத்தில் மிளிரும் கலைவண்ணமும் மனிதநேயத்தின் மகத்துவத்தை ஆழப் பறைசாற்றுகின்றன. படைப்பாளியின் கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளித்து படைப்புகள் இடம் பெற்றிருப்பதால் கருத்துகள் அனைத்தும் படைப்பாளியினுடையதே. இம்மலர் சிறப்பாக வெளிவர ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து உற்சாகப்படுத்திய கல்லூரி முதல்வருக்கும் பேராசிரியப் பெருமக்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், மாணவச் செல்வங்கள் ஆகியோருக்கும் சிறந்தமுறையில் அச்சிட்ட அச்சகத்தாருக்கும் மலர்க் குழு மனமார்ந்த நன்றியை நவில்கிறது.

இவண்

மலர்க்குழு

# உள்ளே...


1. ஆண்டறிக்கை
2. **Graduation Day Address**
3. ஐ.ஏ.எஸ். ஆக விருப்பமா?
4. உணவு
5. தேசத்தந்தைகள்
6. சோழர்கால அளவை முறைகள்
7. கொரோனாவும் வாழ்க்கை முறை மாற்றமும்
8. அனுபவப் பாடம்
9. கோஹினூர் வைரம்
10. தமக்கை (அவளும் ஒரு தாயே)
11. பெண்ணாகும் தமிழ்
12. புது விடியல்
13. ஆசிரியர்
14. கண்ணாடி
15. வாழ்க்கை ஒரு கேள்விக்குறி?
16. பள்ளி
17. நேர்ப்படப் பேசு
18. இயற்கையின் அன்பளிப்பு
19. தற்கொலை இயலாமையின் எல்லையா?
20. இழந்துவிடாதே
21. நட்பு
22. அம்மா
23. பெண்ணின் அழகு
24. இந்தியா
25. கனவுகள்
26. காத்திருப்பு
27. கல்வி
28. பணத்திற்கு அடிமையாகாதே
29. **Self Confidence**
30. **National Cadet Corps**
31. **The Impact of Reading Brain**
32. **To Our Students**
33. ஓவியங்கள்



கல்லூரி முதல்வர்



கல்லூரி ஆட்சிக் குழுவினர்



கல்லூரியின் ஆணிவேர்கள்



கல்லூரியின் அடித்தள வேர்கள்



**R.MOHANAPRIYA**
UNIVERSITY I RANK
PG CHEMISTRY



**P.NAVEENA**
UNIVERSITY III RANK
PG CHEMISTRY



**P.NIRMAL KUMAR**
UNIVERSITY VII RANK
PG CHEMISTRY



**K.KAVYA**
UNIVERSITY I RANK
PG ZOOLOGY



**C.K.ANJU**
UNIVERSITY II RANK
PG ZOOLOGY



**A.S.ANUSREE**
UNIVERSITY III RANK
PG ZOOLOGY



**J.JAMSHIYA**
UNIVERSITY VI RANK
PG ZOOLOGY



**K.ANILA UNNIKRISHNAN**
UNIVERSITY VII RANK
PG ZOOLOGY



**M.ROHINI**
UNIVERSITY IV RANK
PG INTERNATIONAL BUSINESS



**M.SANTOSH KUMAR**
UNIVERSITY IX RANK
UG ECONOMICS



**M.VADIVELU**
UNIVERSITY I RANK
UG HISTORY



**A.ASHIKA ILAMATHI**
UNIVERSITY VI RANK
UG CHEMISTRY



**M.SAHUL AMEED**
UNIVERSITY VIII RANK
UG PHYSICS



**N.S.KOKILAVANI**
UNIVERSITY X RANK
UG ZOOLOGY




**K.RAJA**
UNIVERSITY IV RANK
UG INTERNATIONAL BUSINESS



**E.RADEESH**
UNIVERSITY V RANK
UG INTERNATIONAL BUSINESS



26-06-2021 முதல் 29-06-2021 வரை சேலம், யதீந்திரா கல்வி அறக்கட்டளை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்திய மாற்றுத் திறனாளிகளுக்கான கொரோனா தடுப்பூசி இயக்கத்தில் நாட்டு நலப்பணித் திட்ட அலகு - 4 தன்னார்வலர்களின் பங்கு



17-09-2021 அன்று தந்தை பெரியாரின் பிறந்தநாள் சமூக நீதி நாளில் கல்லூரி முதல்வர் அவர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்றுக் கொண்ட நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள்



29-10-2021 அன்று நாட்டு நலப்பணித் திட்டம் அலகு - 2 சார்பாக நடைபெற்ற மரம் நடு விழாவில் கோவை, பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர்(பொ), முனைவர் கா. முருகவேல் அவர்கள் மரக்கன்று நட்ட போது




15-10-2021 அன்று நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2 சார்பாக கொண்டாடப்பட்ட எழுச்சி தினத்தில் உதவி காவல் ஆணையர் திரு.வரதராஜன் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.பிச்சையா ஆகியோரின் சிறப்புரை



14-03-2022 அன்று திருப்பூருக்கு வருகை புரிந்த டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் திரு.பொன்ராஜ் அவர்கள் வாழ்த்திப் பாராட்டிய நாட்டு நலப்பணித் திட்ட அலகு - 2 திட்ட அலுவலர் மற்றும் தன்னார்வலர்கள்



டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் பங்குபெற்று 03-02-2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்த குழுவில் இடம்பெற்ற அரசு கலைக்கல்லூரி மாணவனாகிய நாட்டுநலப்பணித் திட்ட அலகு -2 தன்னார்வலர் பூபாலன்

# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்
# ஆண்டறிக்கை
# 2021 - 2022 ஆம் கல்வியாண்டு

1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரி இந்த 56 ஆண்டு காலத்தில், எத்தனையோ தொழிலதிபர்களையும், கல்வியாளர்களையும் உருவாக்கி இந்த மண்ணுக்கு மாபெரும் பங்களிப்பைச் செய்து இருக்கின்றது. கடந்த இரண்டாண்டுகளாகக் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகக் கல்லூரி முழுமையாக இயங்காத சூழலில் இருந்து இந்த கல்வியாண்டுதான் மாணவர்கள் கல்லூரிக்கு வந்து பயிலும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பது சற்று ஆறுதலாக உள்ளது. வரும் கல்வியாண்டுகளும் எந்தவொரு அச்சுறுத்தல்களும் இல்லாமல் தொய்வற்ற கற்பித்தல் பணி தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று எல்லாம் வல்ல இயற்கையை வேண்டி 2021 - 2022 ஆம் கல்வியாண்டின் ஆண்டறிக்கையை அளிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

2020 - 2021 ஆம் கல்வியாண்டின் இறுதியில், பாரதியார் பல்கலைக்கழகத் தேர்வுகளில் இளநிலைப் பட்ட வகுப்புகளின் தேர்ச்சி விழுக்காடு 94%, முதுநிலைப் பட்ட வகுப்புகளின் தேர்ச்சி விழுக்காடு 95.73% ஆகும். பல்கலைக்கழகத் தேர்வு முடிவுகளின் தரவரிசைப்பட்டியலில் இளநிலைப் பட்ட வகுப்புகளில் வரலாற்றுத் துறையில் எம்.வடிவேலு, முதுநிலைப் பட்ட வகுப்புகளில் வேதியியல் துறையில் ஆர். மோகனப்பிரியா, விலங்கியல் துறையில் கே. காவ்யா ஆகிய மூவரும் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளனர். இளநிலைப் பட்ட வகுப்புகளில் பன்னாட்டு வணிகவியல் துறையில் கே. ராஜா 4-ஆம் இடத்தையும், இ. ரதிஷ் 5-ஆம் இடத்தையும், வேதியியல் துறையில் ஏ. ஆசிகா இளமதி 6-ஆம் இடத்தையும், இயற்பியல் துறையில் எம். ஷாகுல்ஹமீது 8-ஆம் இடத்தையும், பொருளியல் துறையில் எம். சந்தோஷ்குமார் 9-ஆம் இடத்தையும், விலங்கியல் துறையில் என்.எஸ். கோகிலவாணி 10-ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். முதுநிலை வகுப்புகளில் விலங்கியல் துறையில் சி.கே. அஞ்சு 2-ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். எ.எஸ். அனுஸ்ரீ 3-ஆம் இடத்தையும், ஜே. ஜம்சியா 6-ஆம் இடத்தையும், வி. ஆனிலா உன்னி கிருஷ்ணன் 7-ஆம் இடத்தையும், வேதியியல் துறையில் பி. நவீனா 3-ஆம் இடத்தையும், பி. நிர்மல்குமார் 7-ஆம் இடத்தையும், பன்னாட்டு வணிகவியல் துறையில் எம். ரோகிணி 4-ஆம் இடத்தையும் பெற்று கல்லூரிக்கும், தத்தம் துறைகளுக்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

இக்கல்வியாண்டில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பிரிவில் 1268 மாணவர்களுக்கும், 523 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு 71 இலட்சத்து 9 ஆயிரத்து எழுநூற்று ஐம்பத்து நான்கு ரூபாய் கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்பட்டுள்ளது. தமிழ் வழியில் பயிலும் 387 மாணவர்களுக்கு 3 இலட்சத்து 48 ஆயிரத்து முந்நூறு ரூபாய் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில் ரூ.1.86 கோடி மதிப்பில் 10 வகுப்பறைகள் கட்டப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளன. இக்கல்வியாண்டில் கல்லூரியின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில்

சாலை அமைத்தல், வெள்ளை அடித்தல் உள்ளிட்ட சிறப்பு பராமரிப்பு பணிகளுக்காக ரூபாய் 48 இலட்சமும், பொது பராமரிப்புப் பணிகளுக்காக ரூபாய் 21 இலட்சமும் ஒதுக்கப்பட்டு பொதுப்பணித் துறையால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணினி அறிவு காலத்தின் கட்டாயத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு கணினி அறிவியல் பாடம் பயிலாத மாணவர்களுக்கு உருவாக்கப்பட்ட கணினி அறிவொளித் திட்டத்தின் கீழ் 621 மாணவ, மாணவியருக்குக் கணினிக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கல்வியாண்டில் புதிதாக மாணவர்களின் பயன்பாட்டிற்காக 15 கணினிகள் மற்றும் அச்சுப்பொறி ஒன்றும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எம் கல்லூரியில் 4 அலகுகளைக் கொண்டு இயங்கி வரும் நாட்டு நலப்பணித் திட்டத்தைத் தமிழக அளவில் சிறப்பாக இயக்கியதில் எம் கல்லூரிக்குத் தனிச்சிறப்பு உண்டு. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் திருப்பூர், சேலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் எம்முடைய மாணவர்கள் தன்னார்வலர்களாகக் கலந்து கொண்டு அரசோடு சேர்ந்து மக்களுக்கு நோய்த்தொற்று, தடுப்பூசி முகாம்கள், ஊழல் தடுப்பு, சுற்றுச்சூழல் பேணுதல், சமூகநீதியை நிலைநாட்டுதல் போன்றவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறந்த பங்களிப்பைச் செய்த நிகழ்வு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. நாட்டுநலப் பணித்திட்ட அலகு 2, ஜூன் 2021 முதல் மார்ச் 2022 வரை 262 நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளது. 2 கிராமங்களைத் தத்தெடுத்து சிறப்பு முகாம்களை நடத்தி தூய்மைப்பணி மற்றும் சுகாதார விழிப்புணர்வு ஆகியவற்றை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. நாட்டுநலப் பணித்திட்டம் அலகு 2ஐச் சார்ந்த இளநிலை இரண்டாமாண்டு வரலாற்று மாணவன் எஸ். பூபாலன் புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பிற்குத் தேர்வு செய்யப்பட்டு கலந்து கொண்டார். கோவையில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் அலகு 2 மாணவர்களான இளநிலை இரண்டாமாண்டு வேதியியல் துறை மாணவன் கே. அருள்குமார் மற்றும் இளநிலை இரண்டாமாண்டு விலங்கியல் மாணவன் பி. பாலசுப்பிரமணியன் தேர்வு செய்யப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள். 2021-22 ஆம் கல்வியாண்டில் சிறப்பாக செயல்பட்டதற்காக குடியரசு தினத்தன்று திருப்பூர் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் திரு. கிராந்திகுமார் இ.ஆ.ப. அவர்கள் அலகு 2- இன் ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆ. மோகன்குமார் மற்றும் அலகு 2- இன் மாணவர்கள் அனைவரையும் பாராட்டி விருதுகளை வழங்கி சிறப்பு செய்தார்.

எமது கல்லூரியின் தேசியமாணவர் படை முனைவர் (மேஜர்) பா. கனகராஜ் தலைமையில் இந்த ஆண்டும் சிறப்பாகச் செயல்பட்டது. 12.07.2021 முதல் 16.07.2021 வரை கோவை காருண்யா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற துப்பாக்கிச்சுடும் பயிற்சி முகாமில் நம் தேசிய மாணவர் படையைச் சார்ந்த 15 மாணவ, மாணவியரும் 19.07.2021 முதல் 24.07.2021 வரை

பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற துப்பாக்கிச்சுடும் போட்டியில் 6 மாணவ, மாணவியரும், கோவை ஒண்டிப்புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 26.08.2021 முதல் 31.08.2021 வரை நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பிற்கான தேர்வு முகாமில் 8 மாணவ, மாணவியரும் 02.10.2021 அன்று திருப்பூரில் நடைபெற்ற 'Fit India Run' என்ற நிகழ்வில் 30 மாணவ, மாணவியரும் கலந்து கொண்டனர். 30.11.2021 முதல் 20.12.2021 வரை குவாலியரில் நடைபெற்ற அகில இந்திய மலையேற்றப் பயிற்சி முகாமில் இரண்டாமாண்டு பொருளாதாரத்துறை மாணவி மிருதுளா கலந்து கொண்டு சிறப்பித்தார். "B" சான்றிதழுக்கான சிறப்பு முகாம் எம் கல்லூரியில் 14, 15 டிசம்பர் 2021 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது. "C" சான்றிதழுக்கான முகாம் எம் கல்லூரியில் 30, 31 மார்ச் 2022 ஆகிய நாட்களில் நடைபெற்றது. கோவை தேசிய மாணவர் படைகுழுமத்தின் சார்பாக சென்னையில் நடைபெறவுள்ள துப்பாக்கிச்சுடும் போட்டியில் கலந்து கொள்ள இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவர் நல்லமுத்து தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

எம் கல்லூரியின் செஞ்சுருள் சங்கத்தின் சார்பாக 01.12.2021 அன்று உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் மகப்பேறு மருத்துவர் டாக்டர் எஸ். கிருத்திகா சிறப்புரையாற்றினார். 22, 23, 24 மார்ச் 2022 ஆகிய 3 நாட்கள் HIV, VBD, TB ஆகிய நோய்கள் பற்றி மாவட்ட அளவிலான இணையவழியில் நடைபெற்ற வினாடி - வினா போட்டிகளில் 50 மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர். இதில் எம் கல்லூரி மாணவர் ஜெ.சி. ரோசன் ரூ. 3000 பரிசுத்தொகைப் பெற்றார். 21.04.2022 அன்று நடைபெற்ற தொற்று நோய்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்வில் டாக்டர் மனோஜ் பிரபாகர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கல்லூரியின் பொது நூலகத்தில் பொது நூல்கள், பாடம் சார் இதழ்கள், நாளேடுகள், வார மற்றும் மாத இதழ்கள், வேலை வாய்ப்பு செய்திகள் மற்றும் உயர்கல்வி செய்திகள் அடங்கிய குறிப்பேடுகளும், கையேடுகளும், வெளியீடுகளும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. நூலகம் கணினி மயமாக்கப்பட்டு மின் தகவல் பரிமாற்று மூலம் மாணவர்களுக்கு சேவை வழங்குகிறது. இந்தக் கல்வியாண்டில் நூலகச் சேவைகளை மாணவர்கள் எளிதில் பெறும்படி மொபைல் ஆண்ட்ராய்டு ஆப் அமைக்கப்பட்டு டிஜிட்டல் நூலகம் செயல்பட்டு வருகிறது. மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வாசகர் வட்டம் செயல்பட்டு சிறந்த வாசிப்பாளரைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஆண்டும் பரிசுகளை வழங்கி வருகிறது. மேலும், பல்வேறு வலைத்தள கருத்தரங்குகளை நடத்தி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

எம் கல்லூரியின் வாக்காளர் விழிப்புணர்வு மன்றத்தின் சார்பாக 10.12.2021 அன்று 12வது தேசிய வாக்காளர் தினத்தின் முன்னோட்டமாக ஓவியம், சுவரொட்டி உருவாக்குதல், ஒரு வரி வாசகம் எழுதுதல், கட்டுரைப்போட்டி ஆகியப் போட்டிகள் நடத்தப்பட்டு, தெரிவு

செய்யப்பட்ட போட்டியாளர்களின் படைப்புகள், மேற்கொண்டு தேர்வு செய்வதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 25.01.2022 அன்று நடைபெற்ற தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வு காலை 10.45 மணிக்கு இணையவழியில் கல்லூரி முதல்வர் தலைமையில் நடைபெற்றது. 10.03.2022 அன்று எனது வாக்கு, எனது எதிர்காலம் - ஒரு வாக்கின் வலிமை எனும் தலைப்பில் இணையத்தளம் வாயிலாக மாணாக்கர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மகளிர் மன்றம் சார்பில் 08.03.2022 அன்று சர்வதேச மகளிர் தின விழா, சேலத்தில் உள்ள தேசிய காப்பீட்டுக் கழகத்தின் மகளிர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. ச. சோபனா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இணைய வழியாக உரையாற்றினார். மேலும், பாலியல் வன்கொடுமைத் தடுப்பு மன்றம் மற்றும் மகளிர் மன்றம் இணைந்து 18.11.2021 முதல் 30.11.2021 வரை 10 நாட்கள், தாய்ப்பால் விழிப்புணர்வு, இளம் பெண்களுக்கான சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு, பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் சவால்கள் பற்றிய விழிப்புணர்வு ஆகிய நிகழ்வுகளை எம் கல்லூரி பேராசிரியைகளைக் கொண்டு செவ்வனே நடத்தியது. இதில் 815 மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

27.12.2021 மற்றும் 28.12.2021 ஆகிய தேதிகளில் வேலைவாய்ப்பு வழிகாட்டி மையம் நடத்திய புத்தாக்கப் பயிற்சியில் 200 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று பயன்பெற்றனர். 01.03.2022 அன்று 103 பண்பலை (FM) மயிலிறகு புகழ் திரு. க. சுந்தரராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "ஒவ்வொருவரும் வெற்றியாளர்களே" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

எம் கல்லூரி வேலை வாய்ப்பு மையம் சார்பாக 06.04.2022 அன்று திருப்பூர், புளூஸ் இன்போடெக் சொலூசன் லிமிடெட் மற்றும் சென்னை, ரீச் அகாடமி. 08.04.2022 அன்று திருப்பூர், டிவிஎஸ் - ஆர்எ ஆட்டோமோடிவ் எக்ஸ்பர்ட் லிமிடெட் மற்றும் பெஸ்ட் பைனான்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் 18.04.2022 அன்று சென்னை, பொன் பியூர் கெமிக்கல்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமை நடத்தின. 500 மாணவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் 147 மாணாக்கர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமன ஆணைகளைப் பெற்றனர்.

எம் கல்லூரியின் உடற்கல்வித் துறை சார்பாகப் பல்கலைக்கழக, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பல்வேறு பரிசுகளைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை தந்துள்ளனர். பாரதியார் பல்கலைக் கழக அளவிலான குத்துச்சண்டைப் போட்டியில் தமிழ்த்துறையில் இளங்கலை முதலாமாண்டு மாணவன் என். ஜெகத்ரட்சகன் தங்கப்பதக்கமும், வேதியியல் துறையில் மூன்றாமாண்டு

மாணவன் எஸ். செல்வக்குமார் வெள்ளிப்பதக்கமும், கணினி பயன்பாட்டியல் துறையில் இளநிலை இரண்டாமாண்டு மாணவன் ஆர். இளங்குமரன் மூன்றாமிடமும், பன்னாட்டு வணிகவியல் துறையில் இளநிலை இரண்டாமாண்டு மாணவி எஸ்.டி. கலைவாணி மூன்றாமிடமும், மிஸ்டர் பாரதியார் போட்டியில் வணிகவியல் துறையில் இரண்டாமாண்டு படிக்கும் மாணவன் எஸ். தினேஷ்குமார் தங்கப்பதக்கமும் பெற்றுள்ளனர்.

தமிழ்த்துறையில் இளங்கலை முதலாமாண்டு மாணவன் என். ஜெகத்ரட்சகன் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற அகில இந்திய அளவில் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான குத்துச்சண்டைப் போட்டியில் பாரதியார் பல்கலைக் கழக அணிக்காக கலந்து கொண்டார். 26.11.2021 முதல் 28.11.2021 வரை திருப்பூரில் நடைபெற்ற ஜூடோ போட்டியில் 48 கிலோ எடைப்பிரிவில் இளங்கலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவி தே. தனுஸ்ரீ முதலிடமும், 52 கிலோ எடைப்பிரிவில் இளங்கலை இரண்டாமாண்டு பொருளியல் மாணவி எஸ். மிருதுளா முதலிடமும் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். கல்லூரிகளுக்கிடையேயான ஹாக்கிப் போட்டியில் நம் கல்லூரி அணி 4-ஆம் இடம் பெற்றது. கணிதத் துறையில் முதுநிலை முதலாமாண்டு மாணவன் எஸ். அகத்தியன் மற்றும் முதலாமாண்டு இளம் வணிகவியல் துறை மாணவன் எஸ். மலரவன் ஆகிய இருவரும் பாரதியார் பல்கலைக் கழக ஹாக்கி அணிக்குத் தேர்வாகி கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற தென்னிந்திய அளவிலான ஹாக்கிப் போட்டியில் கலந்து கொண்டனர். பல்கலைக் கழக அளவிலான வாலிபால் போட்டியில் எம் கல்லூரி 4-ஆம் இடமும், சதுரங்கப் போட்டியில் 6-ஆம் இடமும் பிடித்தது.

பாரதியார் பல்கலைக் கழக கல்லூரிகளுக்கிடையேயான கபடி போட்டியை எம் கல்லூரி நடத்தியது. இதன் பரிசளிப்பு விழாவில் மாவட்ட ஆட்சியர் டாக்டர் எஸ். வினீத் மற்றும் தமிழக விளையாட்டுத் துறைச்செயலர் டாக்டர் ஆர். ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். உடுமலைப்பேட்டையில் திருப்பூர் மாவட்ட ஹாக்கி சம்மேளனம் நடத்திய மாவட்ட அளவிலான ஹாக்கிப் போட்டியில் எம் கல்லூரி முதலிடமும், திருப்பூர் மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்திய கலை மற்றும் பொறியியல் கல்லூரிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டியில் முதலிடமும், ராஜபாளையம் பெஸ்ட் பிரண்ட்ஸ் ஹாக்கி கிளப் நடத்திய மாநில அளவிலான ஹாக்கிப் போட்டியில் 4-ஆம் இடமும், எம் கல்லூரி நடத்திய மாநில அளவிலான எழுவர் ஹாக்கிப் போட்டியில் 4-ஆம் இடமும் பிடித்தது. இவ்வாண்டு கல்லூரியில் விளையாட்டு விழா சிறப்பாக நடந்தேறியது. காவேரி, தாமிரபரணி, வைகை, அமராவதி என்ற நான்கு அணியாக மாணவர்களைப் பிரித்து 7 குழுப்போட்டிகளும், 6 தடகளப்போட்டிகளும், ஆசிரியர்களுக்கு 2 குழுப்போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

எம் கல்லூரி திருப்பூர், சாமுண்டிபுரம் அறிவுத் திருக்கோயில் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையுடன் இணைந்து ஆண்டுதோறும் நடத்தும் இளநிலை இரண்டாமாண்டு மாணவ, மாணவிகளுக்கான யோகா பயிற்சியில் 785 மாணவ, மாணவியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு 22.03.2022 அன்று நடைபெற்ற விழாவில் திருப்பூர் மாநகர மேயர் திரு. என். தினேஷ்குமார் மற்றும் துணை மேயர் எம்.கே.எம். பாலசுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இக்கல்வியாண்டில் நுண்கலை மன்றம் சிறப்பாகச் செயல்பட்டு மாணவர்களை ஊக்குவித்து பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளச் செய்துள்ளது. 02.10.2021 அன்று அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய பேச்சுப்போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவர் ப. விஜயராஜ் மூன்றாம் பரிசும், 12.11.2021 அன்று ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்வளர்ச்சித் துறை நடத்திய மாவட்ட அளவிலான பேச்சுப்போட்டியில் இளநிலை இரண்டாமாண்டு வேதியியல் மாணவி சா. பிருந்தா முதற்பரிசும், 11.12.2021 அன்று பாரதியார் பல்கலைக் கழகம் நடத்திய கல்லூரிகளுக்கிடையேயான கவிதைப் போட்டியில் இளம் வணிகவியல் இரண்டாமாண்டு மாணவி க. யுவஸ்ரீ முதற்பரிசும், இளம் பாரதி என்ற விருதும், 01.03.2022 அன்று திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் சார்பாக மாவட்ட அளவில் நடைபெற்ற ஓவியப்போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவன் ம. கவின்குமார் முதல்பரிசும், கட்டுரைப் போட்டியில் மூன்றாமாண்டு கணினி பயன்பாட்டியல் மாணவி ச.சு. தனுஸ்ரீ இரண்டாம் பரிசையும், பேச்சுப் போட்டியில் இளநிலை இரண்டாமாண்டு வேதியியல் மாணவி சா. பிருந்தா மூன்றாம் பரிசையும், கவிதைப் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவன் ப. விஜயராஜ் இரண்டாம் பரிசையும், 22.03.2022 திருச்சி தூயவளனார் தன்னாட்சி கல்லூரி மாநில அளவில் நடத்திய ஓவியப் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவன் ம. கவின்குமார் முதல் பரிசையும், 19.04.2022 அன்று அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை ஒட்டி தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டியில் முதுகலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கிய மாணவன் ப. விஜயராஜ் மூன்றாம் பரிசையும் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். 75ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு 16.11.2021 முதல் 20.11.2021 வரை நம் கல்லூரியில் மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு 07.12.2021 அன்று பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் குமாரபாளையம் எஸ்.எஸ்.எம். கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் நா. சங்கரராமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், பல்வேறு அமைப்புகளில் நடைபெற்ற போட்டிகளில் எம் மாணாக்கர்கள் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்று வந்துள்ளனர்.

எம் கல்லூரியின் பன்னாட்டு வணிகவியல் துறைப் பேராசிரியர் திருமதி. மணிமேகலை, கணிதத்துறைப் பேராசிரியர் து. சரவணன் ஆகியோர் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் வாயிலாக முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

இயற்பியல் துறையில் முனைவர் க.பா. ராஜேஷ் வழிகாட்டலில் ஒருவரும், விலங்கியல் துறையில் முனைவர் ஆ. மோகன்குமார் வழிகாட்டலில் ஒருவரும், கணினி பயன்பாட்டியல் துறையில் முனைவர் கோ.மு. நசீரா வழிகாட்டலில் இருவரும், கணினி அறிவியல் துறையில் முனைவர் மோ. கோபி வழிகாட்டலில் ஒருவரும், வணிகவியல் துறையில் முனைவர் பா. ராஜசேகரன் வழிகாட்டலில் இருவரும், முனைவர் மு. கோப்பணசாமி, முனைவர் பா. கனகராஜ், முனைவர் கு. சந்திரசேகரன், முனைவர் ஜெயச்சந்திரன் ஆகியோர் வழிகாட்டலில் தலா ஒருவரும், வேதியியல் துறையில் முனைவர் சு.பா. ராஜாசிங் வழிகாட்டலில் ஒருவரும், முனைவர் கு. ராஜகோபால் வழிகாட்டலில் ஒருவரும், கணிதத் துறையில் முனைவர் அ. ராதாரமணி, முனைவர் சு. சேகர் வழிகாட்டலில் தலா ஒருவரும் கோவை பாரதியார் பல்கலைக் கழக வழியாக முனைவர் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

தமிழ்த் துறையில் முனைவர் நா. பாலசுப்பிரமணியன், முனைவர் இரா. இந்திராணி வழிகாட்டலில் தலா ஒருவரும், கணினி அறிவியல் துறையில் முனைவர் இரா. சங்கர், முனைவர் சு. துரைசாமி, முனைவர் மோ. கோபி, முனைவர் ஆ. கீதா வழிகாட்டலில் தலா ஒருவரும், இயற்பியல் துறையில் முனைவர் வ. செந்தில்குமார், திருமதி வெ. ஆ. விஜயகீதா வழிகாட்டலில் தலா ஒருவரும், வேதியியல் துறையில் முனைவர் சீ. கார்த்திகேயன் வழிகாட்டலில் ஒருவரும் கோவை பாரதியார் பல்கலைக் கழக வழியாக ஆய்வியல் நிறைஞர் பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

இயற்பியல் துறைப் பேராசிரியர் முனைவர் வ. செந்தில்குமார் அவர்களின் வழி காட்டலில் முதுநிலை இரண்டாமாண்டு மாணவன் ஆர். கேசவராஜ் TNSCST மாணவர் திட்ட ஆய்வின் மூலம் ரூ. 7500/- பெற்றுள்ளார். தமிழ் மன்றத்தின் சார்பாக 01.12.2022 அன்று மகாகவி சுப்ரமணிய பாரதியின் 140-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற "பாரதி கவிதாஞ்சலி" நிகழ்வில் ஈரோடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் ஆ. இராமலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். 16, 17 டிசம்பர் 2021 ஆகிய நாட்களில் சிந்தனை - செயல் - ஆக்கம் எனும் தலைப்பில் நடைபெற்ற இரண்டு நாள் பயிலரங்கில் திரைப்பட இயக்குநர் திரு. புகழ் பயிலரங்க பயிற்றுநராகக் கலந்து கொண்டு குறும்பட இயக்கம், திரைக்கதை அமைத்தல் ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளித்தார். இதில் 120 மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கணினி பயன்பாட்டியல் துறையில் இளநிலை இரண்டாமாண்டு மாணவர் எஸ். கோகுல் Github என்ற வலைத் தளத்தில் நீர் மேலாண்மை முறை மற்றும் தானியங்கி பண இயந்திரம் என்ற ஆய்வுத் திட்டங்களை வடிவமைத்து பதிவேற்றியுள்ளார். வெள்ளாளர் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 08.04.2022 அன்று வேதியியல் அறிவியலில் புதுமை மற்றும் ஆராய்ச்சி அணுகு முறை என்ற தலைப்பில் நடைபெற்ற ஒரு நாள் தேசிய கருத்தரங்கில் முதுநிலை இரண்டாமாண்டு வேதியியல் மாணவி சி. நாககார்த்திகா, முதுநிலை முதலாமாண்டு வேதியியல் மாணவன் டி. கார்த்திக் ஆகியோர் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

கல்லூரியின் 48ஆவது பட்டமேற்பு விழா 29.10.2021 அன்று நடைபெற்றது. பாரதியார் பல்கலைக் கழகப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் கா. முருகவேல் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றி 2017-18, 2018-19 ஆகிய கல்வியாண்டுகளில் பட்டம் பெறுவதற்குத் தகுதியுடைய 924 (717 இளநிலை + 207 முதுநிலை) மாணவ மாணவியர்களுக்குப் பட்டச் சான்றிதழ்கள் மற்றும் பல்கலைக் கழக அளவில் சிறப்பிடம் பெற்ற 8 மாணவியருக்குப் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவியர் நேரடியாகக் கலந்து கொண்டு பட்டங்கள் பெறவும், மற்றவர்கள் இணையவழியில் காணவும் வழிவகை செய்யப்பட்டது.

இக்கல்வியாண்டில் வணிக நிருவாகவியல் துறைக்கு முனைவர் ர. ஹரிதாஸ் மற்றும் முனைவர் ரெ. சக்திவேல் வேறு கல்லூரியிலிருந்து மாறுதல் பெற்று வந்துள்ளனர். மேலும், உதகை கலைக் கல்லூரியில் நிதியாளராகப் பணியாற்றிய திரு. ஜெயராமன் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரிக்குப் பணி மாறுதல் பெற்று வந்துள்ளார்.

எம் பேராசிரியர்கள் கற்பித்தல் பணி மட்டுமன்றி தேசிய மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டும் பல்வேறு பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டக் குழுவில் இடம் பெற்றும், அரசு சார்ந்த பல்வேறு குழுக்களில் இடம்பெற்றும், மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டும் பல்வேறு சமூகப்பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டும் நாட்டிற்குச் சிறந்த பங்களிப்பைச் செய்து வருகின்றனர் என்று கூறுவதில் நான் பெருமை கொள்கிறேன்.

நன்றி. வணக்கம்.

# GRADUATION DAY ADDRESS

By

Prof. Dr. K. MURUGAVEL

REGISTRAR i/c

Senior Professor & Head

Bharathiar University, Coimbatore – 641 046

A warm Good Morning, Everyone.

Dear young graduates! It is a special day for each one of you, a milestone in your life. At this juncture, I would like to offer my heartiest wishes and congratulations to you. I also join the happiness with which the parents are sparkling with the success of their wards. I take this opportunity to congratulate the chairman, correspondent and the members of the trust, the Principal, Faculties and staff in Administration who have put their efforts to nurture and develop this college into a quality educational centre.

Convocation is a solemn occasion in the annual calendar of an institution of learning. It is a memorable milestone in the career span of a student. Hence, it is a day for celebrations. On this occasion, I congratulate every one of you.

You are entering another important phase of your life. It will be exciting, full of challenges and opportunities. You are coming out of the protective shade of your teachers and parents. With the knowledge you have acquired during your study in this college, you should show your talents and face the challenges. You translate all your learning and training into actions.

Education is a significant factor in changing women's role and status in the society. Realisation has dawned in India that without education women cannot be empowered. India has taken several steps towards empowering women through education. There is a saying that if you educate a boy, you educate an individual but if you educate a girl, you educate a family. So you should keep these thoughts in your mind and you should try to develop the women society apart from your own development.

Education is the most effective instrument to acquire knowledge, to nurture social and moral values and to make citizens socially sensitive, responsible and forward looking. It is only a good educational system that can establish a healthy relationship between individuals and society by inculcating the virtues of tolerance, discipline, commitment, culture, compassion and sensitivity which are the building blocks of a healthy society.

Today, we can be proud that our country has made remarkable achievements in many fields. Our Universities and institutions of higher learning have produced a good number of scientists and professionals who are making waves in their fields. Indian professionals are making an impact in several parts of the world today, as world-class professionals in many fields. India is widely recognized today as a potential knowledge hub.

To be effective participants in the process of nation building, people have to be empowered by education, good health care, and provision of adequate employment opportunities. When we do not invest in the capabilities of our people they can become a social and economic liability. But when we do invest they then become a great asset, as asset for their family, as asset for society at large, an asset for our country and an asset for all humanity.

My dear young graduates! Please do remember that you are the real wealth of our nation. Your resource, human resource, is a critical factor for development. The rapid recovery of the German and Japanese economies from the devastation of World War II demonstrated the influence of human factors, quite apart from the inputs of physical capital.

Capital and natural resources are passive factors of production while human beings are the active agents who accumulate capital, exploit natural resources, build social, economic and political organizations and carry forward national development. A country which is unable to develop the skills and knowledge of its people and to utilize them effectively will be unable to develop anything else.

The aim of education is to impart human values, which are the most sublime things as far as any society is concerned. There is no such society which forbids truth, compassion and service. Human values are universal. They are inherent in every human being. When they are applied in day to day life they become human values. Children display most of the human values in their behaviour. They love each other, play and share with each other. Hunger is the common feeling. Every living being feels hungry. Sharing food is human. But taking other's share of food by force is not an act of human value.

The integration of education and values makes the student more competent to handle the complex challenges of the professional world they will now enter. At the same time it enables them to become better human beings with a finer, culturally rich character. The high ideal that Swami Vivekananda set for education in India was man-making and nation building. The Indian view of education aims at an even higher ideal. It seeks to equip the students for the task of not only nation-building, but also world-building.

Today's recipients of degrees and awards have precisely done this through the hard work. We are proud of them. They have shown that real happiness can be found only by realizing the pleasure in ones works and that too with commitment for quality. You are now at a threshold of new life. It is a different challenge. You must face it with positive approach towards life.

Jawaharlal Nehru used to often quote 'We have to run as fast as we can to stay where we are.' And, therefore, let there be a sense of urgency, let there be a sense of commitment. I am sure that, if people apply their minds in this direction, we can see the developed India.

Please remember! Success and happiness are not synonymous. All successful people are not happy, and all happy people are not successful. Each of us chooses different combinations of success and happiness on the basis of a number of factors. Indeed, both Success and Happiness are highly subjective and there are no metrics to measure it.

Decide what you want to be, then aim high and work hard and you will achieve your aim. A survey of the lives of all those who achieved success shows that they worked hard. May God bless you with this vision of life not only today but also throughout your life as you leave this exemplary, noble institution and walk into the journey of life with great hopes. You are the future of not only this country but also of mankind. I sincerely wish you all the best in your life. May your aspirations and dreams be fulfilled not in a narrow sense of material success and prosperity but in the broadest sense of welfare of mankind.

My best compliments once again to the young students graduating today. I wish you all success in your chosen careers and future endeavours. I wish the college all round success in every respect. Wish you All the Best. I congratulate all of you and offer my greetings on this happy and memorable occasion.

முனைவர் கா. முருகவேல்
பதிவாளர்(பொ)
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை-641046

## 29.10.2021 அன்று 48 ஆம் பட்டமேற்பு விழாவில் ஆற்றிய பேருரை

அனைவருக்கும் வணக்கம்.

அன்பான இளம் பட்டதாரிகளே உங்கள் வாழ்வில் உங்கள் அனைவருக்கும் இன்றையநாள் மிக முக்கியமானதொரு நாள். இந்த சமயத்தில் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், உங்களை வளர்த்து ஆளாக்கிய உங்கள் பெற்றோருடன் என்னுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறேன். இந்தக் கல்லூரியை மிகச்சிறந்த கல்வி நிறுவனமாக உருப்பெற்று வளர்ச்சிப்பாதையில் செல்ல தொடர்ந்து முயற்சி எடுத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டமேற்பு விழா என்பது ஒரு கல்வி நிறுவனத்தின் ஆண்டு நாட்காட்டியில் முக்கியமான நிகழ்வாகும். இது மாணவர்களின் கல்விப் பயணத்தில் மறக்க முடியாத மைல்கல் ஆகும். இந்நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்தகைய தருணத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

மாணவர்களே நீங்கள் உங்கள் வாழ்வின் முக்கியமான அடுத்த கட்டத்தில் அடியெடுத்து வைக்கிறீர்கள். எதிர்பார்ப்புடன் கூடிய சவால்களையும் வாய்ப்புகளையும் கொண்டிருக்கும் உங்கள் பெற்றோர் மற்றும் பேராசிரியர்களின் பாதுகாப்பு நிழலில் இருந்து வெளியில் வருகிறீர்கள். உங்களுடைய கல்லூரிக்காலத்தில் நீங்கள் எதிர் கொள்ளும் சவால்களை உங்கள் கல்லூரிக் காலத்தில் பெற்ற அறிவின் மூலம் எதிர்கொண்டு உங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்திச் செயல்பட வேண்டும். நீங்கள் கற்றதையும் பயிற்சியையும் உங்கள் செயல்வழியாக வெளிப்படுத்த வேண்டும்.

சமூகத்தில் பெண்களின் பங்கினையும் அந்தஸ்தையும் கல்வி மாற்றக்கூடிய குறிப்பிடத்தக்க காரணியாகும். கல்வி இல்லாத பெண்களால் இந்தியாவின் விடியலும் பெண்கள் அதிகாரம் பெறுவதும் இயலாத ஒன்று என்பதை உணரமுடியும். இந்தியத்திருநாடு கல்வி மூலம் பெண்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற எண்ணற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஒரு பையனுக்குக் கல்வி கற்பித்தால் தனி ஒரு மனிதனுக்குக் கற்றுக் கொடுத்தது ஆகும். ஆனால் ஒரு பெண்ணுக்குக் கல்வி கற்பித்தால் ஒரு குடும்பத்திற்கே கற்றுக் கொடுத்தது போல் ஆகும் என்பது வழக்கு. இந்தச் சிந்தனையை நீங்கள் உங்கள் மனதில் நிறுத்துங்கள். உங்கள் தனித்த வளர்ச்சிக்கு அப்பால் சமூகத்தில் பெண்கல்வி வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றுங்கள்.

அறிவைப் பெறுவதற்குக் கல்வி மிகச்சிறந்த கருவியாக இருப்பதுடன் சமூக அறங்களையும் விழுமியங்களையும் கொண்ட, சமூக அக்கறையுடன் முற்போக்குச் சிந்தனையுடன் பொறுப்புணர்வு மிக்க மிகச் சிறந்த குடிமகனை உருவாக்கும். தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையிலான சகிப்புத்தன்மை, ஒழுக்கம், பொறுப்பு, பண்பாடு, இரக்கம், உணர்திறன் முதலான ஆரோக்கியமான உறவுகளைப் பேணிக்காத்து நல்ல சமுதாயத்தின் படிக்கல்லாக இருப்பது நல்ல கல்விமுறையாகும்.

இன்று நம் நாடு பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளைப் படைத்திருப்பது பெருமைக்குரியது. உயர்கல்வியில் நமது பல்கலைக் கழகங்களும் கல்வி நிறுவனங்களும் கணிசமான எண்ணிக்கையில் விஞ்ஞானிகளையும் தொழில் வல்லுநர்களையும் அவரவர் துறைகளில் புதிய வீச்சுடன் உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. இந்தியத் தொழில் வல்லுநர்கள், உலகின் தலைசிறந்த தொழில் வல்லுநர்களிடையே மிகப்பெரிய தாக்கத்தை இன்று உலகின் பல்வேறு பகுதிகளில் ஏற்படுத்தி வருகின்றனர். இந்தியா அறிவாற்றலின் மையம் என்று பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உடல் ஆரோக்கியம், பாதுகாப்பு, வேலைவாய்ப்பு வசதிகள் ஆகியவற்றைக் கல்வியால் பெற்ற அதிகாரத்தால் தேசத்தைக் கட்டமைக்கும் முறையில் மிகச்சிறந்த பங்கேற்பாளராகத் திகழ முடியும். தகுதியையும் திறமையையும் முதலீடாகக் கொள்ளாதபோது சமூகக் கடனாளியாக ஆகிவிடுகிறார்கள். ஆனால், தகுதியையும் திறமையையும் முதலீடாகக் கொண்டால் அவர்கள் சிறந்த சொத்தாக, குடும்பத்தின் சொத்தாக, வளர்ந்த சமூகத்தின் சொத்தாக, நாட்டின் சொத்தாக, மானுடத்தின் சொத்தாகத் திகழ்வார்கள்.

என்னுடைய அன்பிற்குரிய பட்டதாரி மாணவர்களே, நீங்கள் தான் நம் தேசத்தின் உண்மையான செல்வம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் ஆற்றல், மனிதவள ஆற்றல் வளர்ச்சியின் முக்கிய காரணி. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் ஜெர்மனி மற்றும் ஜப்பான் நாட்டுப் பொருளாதார மீட்சி பொருள் மூலதனத்தைவிட மனிதவளக் காரணிகளே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

மூலதனம் மற்றும் இயற்கை வளங்கள் உற்பத்தியின் செயலற்ற காரணிகளாகும், அதே சமயம் மனிதர்கள் மூலதனத்தைக் குவித்து, இயற்கை வளங்களைச் சுரண்டி, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளை உருவாக்கி தேசிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் செயலில் உள்ள முகவர்களாக உள்ளனர். ஒரு நாடு தனது மக்களின் திறன்களையும் அறிவையும் வளர்த்து, அவற்றைத் திறம்பட பயன்படுத்த முடியாது போனால் வேறு எதையும் வளர்க்க முடியாது.

எந்தவொரு சமூகத்தையும் பொறுத்த வரையில் மிக உயர்ந்த விஷயங்களான மனித விழுமியங்களை வழங்குவதே கல்வியின் நோக்கமாகும். உண்மை, கருணை மற்றும் சேவையைத் தடை செய்யும் நிலை கல்வி பெற்ற சமூகத்தில் இருக்காது. மனித விழுமியங்கள் உலகளாவியவை. அவை ஒவ்வொரு மனிதனிடமும் இயல்பாகவே உள்ளன. அன்றாட வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்தும்போது அவை மனித விழுமியங்களாக மாறும். குழந்தைகள் தங்கள் நடத்தையில் பெரும்பாலான மனித மதிப்புகளை வெளிப்படுத்துகிறார்கள்.

அவர்கள் ஒருவருக்கொருவர் நேசிக்கிறார்கள், விளையாடுகிறார்கள், ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கிறார்கள். பசி என்பது பொதுவான உணர்வு. ஒவ்வொரு உயிரினமும் பசியை உணர்கிறது. உணவைப் பகிர்ந்துகொள்வது மனிதம். ஆனால் மற்றவர்களின் பங்கை வலுக்கட்டாயமாக எடுத்துக்கொள்வது மனித மதிப்பிற்குரிய செயல் அல்ல.

கல்வி மற்றும் விழுமியங்களின் ஒருங்கிணைப்பு, மாணவர்கள் இப்போது நுழையப்போகும் தொழில்சார் உலகின் சிக்கலான சவால்களைக் கையாள்வதில் திறமையானவர்களாக ஆக்குகிறது. அதே நேரத்தில், சிறந்த, கலாச்சார ரீதியாக வளமான தன்மையுடன் சிறந்த மனிதர்களாக மாற இது அவர்களுக்கு உதவுகிறது. இந்தியாவில் கல்விக்காக சுவாமி விவேகானந்தர் வகுத்த உயர்ந்த இலட்சியம் மனிதனை உருவாக்குவதும், தேசத்தைக் கட்டமைப்பதும் ஆகும். கல்வி பற்றிய இந்தியப் பார்வை இன்னும் உயர்ந்த இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேசத்தைக் கட்டியெழுப்புவது மட்டுமின்றி, உலகைக் கட்டியெழுப்பும் பணிக்கும் மாணவர்களை ஆயத்தப்படுத்த முயல்கிறது.

இன்றைய பட்டங்கள் மற்றும் விருதுகளைப் பெற்றவர்கள் கடின உழைப்பின் மூலம் துல்லியமாக இதைச் செய்துள்ளனர். அவர்களை நினைத்துப் பெருமை கொள்கிறோம். ஒருவரின் பணியில் உள்ள மகிழ்ச்சியை உணர்ந்து, அதுவும் தரத்தில் அர்ப்பணிப்புடன் இருப்பதன் மூலம் மட்டுமே உண்மையான மகிழ்ச்சியைக் காண முடியும் என்பதை அவர்கள் காட்டியுள்ளனர். நீங்கள் இப்போது புதிய வாழ்க்கையின் வாசலில் இருக்கிறீர்கள். இது ஒரு வித்தியாசமான சவால். வாழ்க்கையில் நேர்மறையான அணுகுமுறையுடன் அதை எதிர்கொள்ள வேண்டும்.

நாம் இருக்கும் இடத்தில் இருக்க எவ்வளவு வேகமாக ஓட முடியுமோ அவ்வளவு வேகமாக ஓட வேண்டும். எனவே, அவசர உணர்வு இருக்கட்டும், அர்ப்பணிப்பு உணர்வு இருக்கட்டும். இந்தத் திசையில் மக்கள் தங்கள் மனதைச் செலுத்தினால், நாம் வளர்ந்த இந்தியாவைக் காணலாம் என்று நான் நம்புகிறேன் என்று ஜவஹர்லால் நேரு அடிக்கடி மேற்கோள் காட்டுவார்.

நினைவில் கொள்ளுங்கள், வெற்றியும் மகிழ்ச்சியும் ஒன்றல்ல. எல்லா வெற்றியாளர்களும் மகிழ்ச்சியாக இல்லை, மகிழ்ச்சியான மக்கள் அனைவரும் வெற்றி பெறுவதில்லை. நாம் ஒவ்வொருவரும் பல காரணிகளின் அடிப்படையில் வெற்றி மற்றும் மகிழ்ச்சியின் வெவ்வேறு சேர்க்கைகளைத் தேர்வு செய்கிறோம். உண்மையில், வெற்றி மற்றும் மகிழ்ச்சி இரண்டும் மிகவும் அகம் சார்ந்தது. அதை அளவிட எந்த அளவீடுகளும் இல்லை.

நீங்கள் என்னவாக இருக்க விரும்புகிறீர்கள் என்பதை முடிவு செய்து, உயர்ந்த இலக்கை நிர்ணயித்துக் கடினமாக உழைத்தால் உங்கள் இலக்கை அடைவீர்கள். வெற்றி பெற்ற அனைவரின் வாழ்க்கையையும் கணக்கெடுத்தால் அவர்கள் கடுமையாக உழைத்துள்ளனர். இந்த முன்னுதாரணமான, உன்னதமான கல்வி நிறுவனத்தை விட்டு வெளியேறி, மிகுந்த நம்பிக்கையுடன் வாழ்க்கைப் பயணத்தில் நீங்கள் நடக்கும்போது, இன்று மட்டுமல்ல, உங்கள் வாழ்நாள் முழுவதும் வாழ்க்கையின் குறிக்கோளை அடைய கடவுள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார். நீங்கள் இந்த நாட்டின் எதிர்காலம் மட்டுமல்ல மனித குலத்தின் எதிர்காலம். உங்கள் வாழ்வில் அனைத்து நலன்களையும் பெற மனதார வாழ்த்துகிறேன். உங்கள் விருப்பங்கள் மற்றும் கனவுகள், வெற்றி மற்றும் வளம் என்பன குறுகிய அளவில் கைகூடாமல் மனிதகுலத்தின் பரந்த நலனில் நிறைவேறட்டும்.

இன்று பட்டம் பெறும் இளம் மாணவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த பாராட்டுகள். நீங்கள் தேர்ந்தெடுத்த உங்கள் பணி மற்றும் எதிர்கால முயற்சிகளில் நீங்கள் அனைவரும் வெற்றிபெற வாழ்த்துகிறேன். கல்லூரி அனைத்து வகையிலும் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன். எல்லாம் நல்லதாக அமைய வாழ்த்துகிறேன். இந்த மகிழ்ச்சியான மற்றும் மறக்க முடியாத சந்தர்ப்பத்தில் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்
சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

# ஐ.ஏ.எஸ் - ஆக விருப்பமா?

முன்னுரை :

இந்தியாவின் உயர்ந்த குடிமைப் பணியான IAS, IPS பற்றி படங்களில் பார்த்து இருப்போம். இதனை "UPSC" ஆண்டுதோறும் நடத்துகிறது. இத்தேர்வுக்கு எப்படி தயார் செய்வது? மேலும் பல தகவலை அறியலாம்.

தகுதி மற்றும் புத்தகங்கள் :

இத்தேர்வை எழுத இந்தியக் குடிமகனாகவும், 21 வயது பூர்த்தி அடைந்தும் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம் பெற்று இருக்க வேண்டும். இதற்கான புத்தகமாக "NEERT" என்ற வகை பாடப் புத்தகம் 6 முதல் 12 வகுப்பு வரையான புத்தகமே அடிப்படையானது.

எப்படி தயாராவது?

முதலில் இதற்கான முதல் படியாக மேலே கண்ட புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும். மேலும் அன்றாட செய்தித்தாள் வாசிப்பைக் கொண்டு வர வேண்டும். குறிப்பாக "THE HINDU" செய்தித்தாள் சிறந்தது. இதனை இணையத்திலும் பதிவிறக்கம் செய்யலாம். இத்தேர்வு 3 கட்டங்களைக் கொண்டது.

1) முதல் நிலை 2) முதன்மை நிலை 3) நேர்முகத் தேர்வு (Prelim, Mains, Interview) எனப்படும்.

இதற்கான பாடங்கள்

- அன்றாட நிகழ்வு (இந்தியா / சர்வதேச)
- இந்திய மற்றும் விடுதலை வரலாறு
- இந்திய அரசியலமைப்பு மற்றும் புவியியல் அமைப்பு
- இந்திய பொருளாதாரம் மற்றும் சமுதாய முன்னேற்றம்
- சுற்றுச்சூழல், காலநிலை, நகரமயமாதல்

மேற்கண்ட பாடங்கள் முதல்நிலைத் தேர்வுக்குரிய பாடம். இது மொத்தம் 2 தாள் GS1, GS2 இதில் GS1 மொத்தம் 250 மதிப்பெண். முதன்மைத் தேர்வு என்பது எழுதும் (எழுத்து) தேர்வு. இத்தேர்வு மொத்தம் 9 தாள்களைக் கொண்டது. இது மொழி, ஆங்கிலம், பொதுத்தாள், கட்டாயத்தாள், விருப்பப் பாடம் என்ற அடிப்படையில் பிரித்து வைக்கப்பட்டு உள்ளது. இது 1750 மதிப்பெண். இறுதியாக நேர்முகத் தேர்வு. இந்நேர்முகத் தேர்வில் தங்களால் ஒரு சிக்கலைத் திறமையாகக் கையாள முடிகிறதா? மற்றும் பயமின்றி தொடர்பு கொள்கிறாரா? என்று சோதிப்பர். இது மொத்தம் 275 மதிப்பெண். மொத்தமாக 2025 மதிப்பெண்கள்.

இத்தேர்வு ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. தற்போது வரும் ஜூன் 2022 முதல் நிலைத் தேர்வு (நுழைவுத் தேர்வு) நடத்தப்பட உள்ளது. நமது கல்லூரியில் இருந்து பல ஆளுமைப் பணியாளர் தேர்வாக வாழ்த்துக்கள்.

- மு.கோபிநாத், மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# இந்தியாவில் அழிந்து போன விலங்கினங்கள்

ஆசிய நேரான தந்தம் கொண்ட யானை

பாலியோக்சோடான் நமாடிகஸ் அல்லது ஆசிய நேரான தந்தம் கொண்ட யானை, இந்திய துணைக் கண்டத்தின் மத்திய மற்றும் பிற்பகுதி ப்ளீஸ்போசீன் மற்றும் ஆசியாவில் பிற இடங்களில் இருந்து அறியப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய யானை இனமாகும்.

ஸ்டெகோடன்

ஆசிய யானைகளை விட ஸ்டெகோடன் மிகவும் பொதுவானது என்பதை வெளிப்படுத்தியது. இது பழங்கால யானையின் மற்றொரு பரிணாமம் ஆகும்.

பாரதத் தேரியம்

பாரதத் தேரியம் என்பது இந்தியாவில் மாஸ்ட்ரீக்டியன் மற்றும் பேலியோசீன் காலத்தில் வாழ்ந்த பாலூட்டி ஆகும். இது மடகாஸ்கர் மற்றும் தென் அமெரிக்க குடும்ப வகையாகும்.

சிவதேரியம்

சிவதேரியம் என்பது ஆப்பிரிக்கா முழுவதும் இந்திய துணைக் கண்டம் வரை பரவியிருந்த ஒட்டகச் சிவிங்கிகளின் அழிந்து போன இனமாகும்.

பிரமத் தேரியம்

பிரமத் தேரியம் என்பது அழிந்து போன ஒட்டகச் சிவிங்கிகளின் இனமாகும். இது ஆசியாவில் இந்தியாவிலிருந்து துருக்கி வரை இருந்தது. இது பெரிய சிவத்தேரியத்துடன் நெருங்கிய தொடர்புடையது.

மெகாலோசெலிஸ் அட்லஸ் (பெரிய ஆமை)

மெகாலோசெலிஸ் அட்லஸ் (பெரிய ஆமை) என்பது மயோசீன் முதல் ப்ளீஸ் டோசீன் வரை வாழ்ந்த கிரிப் டோபிரான் ஆமைகளின் அழிந்து போன இனமாகும். வறண்ட பனிக்காலங்களில் இது இந்தியா பாகிஸ்தான் நாடுகளில் காணப்படும்.

சமீபத்திய அழிவுகள்

| | |
|---|---|
| இந்திய ஆரோக்ஸ் | - அழிந்து வரும் ஆரோக்ஸ் கிளையினமாகும் (காளை) |
| இளஞ்சிவப்பு தலை வாத்து | - இப்போது மியான்மரில் மட்டுமே காணப்படுகிறது. மிகவும் வேகமாக அழிந்து வரும் விலங்கு |
| சந்தர்பன் குள்ள காண்டாமிருகம் | - காண்டாமிருகக் குடும்பத்தில் மிகவும் அரிதான இனமாகும் |
| வடக்கு சுமத்ரா காண்டாமிருகம் | - சுமத்ரா காண்டாமிருகம் காண்டாமிருகத்தின் மிகவும் பரவலான கிளையினமாகும் |
| ஆசிய சிறுத்தை | - மிகவும் ஆபத்தான நிலையில் உள்ள சிறுத்தையின் நிலையினமாகும். இப்போது ஈரானில் மட்டுமே எஞ்சி இருக்கிறது. |

- மு.சுரேஷ்குமார், மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# தேசத் தந்தைகள்

**இந்தியா - மகாத்மா காந்தி:**

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் அதிக ஈடுபாடும் பற்றும் கொண்டவர் இவர். இவரின் அகிம்சைக் கொள்கையால் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்தார். அதனால் இவரை இந்திய அரசும், மக்களும் தேசத் தந்தை என அழைத்தனர்.

**அமெரிக்கா - ஜார்ஜ் வாஷிங்டன்:**

இவர் அமெரிக்கா சுதந்திரப் போரின் போது சிறப்பாகச் செயல்பட்டவர்களில் ஒருவர் ஆவார். இவரை அமெரிக்காவின் தந்தை எனவும் அழைக்கின்றனர். அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர் இவரே ஆவார்.

**ஜாம்பியா - கென்னத் கவுண்டா:**

ஜாம்பியா சுதந்திரமடைய இவர் முக்கிய காரணமாக அமைந்தார். ஆங்கிலேயர் பிடியில் இருந்து வந்த ஜாம்பியா சுதந்திரம் அடைய மூலக் காரணமாக இருந்தவர். ஜாம்பியாவின் முதல் ஜனாதிபதி இவரே ஆவார். ஆதலால் இவரை ஜாம்பியாவின் தேசத்தந்தை என அழைக்கிறார்கள்.

**உக்ரைன் - போஹ்டன் கமெல்கிட்ஸ்கி:**

இவர் ஒரு உக்ரேனிய இராணுவத் தளபதி ஆவார். காமன்வெல்த்தின் அதாவது லிதுவேனியன் காமன்வெல்த் மேலாதிக்கத்தின் கீழ் இருந்தது. அதை எதிர்த்துப் போராடினார். பின்னர் விடுவிக்கப்பட்டு ரஷ்யா கட்டுப்பாட்டில் இணைந்தது. சோவியத் யூனியன் சிதைவில் மீண்டும் தனியாகப் பிரிந்து உக்ரைன் தனி நாடானது. இவரின் நினைவாக ரூபாய் நோட்டுகளில் இவர் புகைப்படம் வெளியிடத் துவங்கினர்.

**பாகிஸ்தான் - முகமது அலி ஜின்னா:**

பாகிஸ்தான் சுதந்திரம் பெறுவதற்கும், தனி முஸ்லீம் நாடு உருவாகுவதற்கும் காரணமாக இருந்தவர் இவரே. பாகிஸ்தானின் முதல் கவர்னர் ஜெனரல் ஆவார். இவரை பாகிஸ்தானின் தேசத்தந்தை என அழைக்கின்றனர்.

**சவுதி அரேபியா - இபின்சவுத்:**

இவர் அரேபிய தீபகற்பத்தில் பழங்குடியினரை ஒருங்கிணைத்து சவுதிப் பேரரசை நிறுவினார். இவரைத் தான் சவுதி அரேபியாவின் தேசத் தந்தை என்கிறோம். இவரின் வம்சம் தற்போது வரை ஆட்சி செய்து வருகிறது.

**தென் ஆப்பிரிக்கா - நெல்சன் மண்டேலா:**

வெள்ளையர்களுக்குச் சலுகை காட்டிய அரசை எதிர்த்துப் போராடியவர். அதாவது நிறவெறிக்கு எதிராகப் போராடியவர். தென்னாப்பிரிக்காவின் முதல் ஜனாதிபதி ஆவார்.

**இலங்கை - டி.எஸ்.சேனாநாய்க்கா:**

இலங்கையின் சுயராஜ்யத்தை நிறுவ வழிவகுத்த இலங்கை சுதந்திர இயக்கத்தின் தலைவராக வெளிப்பட்ட இலங்கையின் முதல் பிரதமர். அவர் தேசத்தின் தந்தை என்று கருதப்படுகிறார். சிங்கள முஸ்லீம் கலவரங்களை அடக்கினார்.

**ரஷ்யா - பீட்டர் I:**

ரஷ்யப் பேரரசை விரிவுபடுத்தியதில் திறமையாகச் செயல்பட்டவர் இவர். ரஷ்யப் பரப்பளவு மேன்மேலும் அதிகரிக்கத் துவங்கியது இவரது காலத்தில் தான். ஆதலால் இவரை ரஷ்யாவின் தந்தை என அழைக்கிறார்கள்.

**ஜப்பான் - பேரரசர் ஜிம்மு:**

இவரைச் சூரிய கடவுளின் மறு உருவம் வழித் தோன்றல் எனவும் கூறுகின்றனர். ஜப்பான் புராணக் கதைகளின் படி இவரை ஒரு துறந்த அரசர் எனவும் கூறுகின்றனர். இதனால் இவர் ஜப்பானின் தந்தை என கூறுகின்றனர்.

- ரா.அருள்குமார், மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு

# உணவு

முன்னுரை

உணவு என்பது ஓர் உயிரினத்திற்குத் தேவையான ஊட்டச்சத்து கிடைப்பதற்காக உண்ணப்படும் எந்த ஒரு உணவையும் குறிக்கும். உணவு வழக்கமாகத் தாவரங்கள் அல்லது விலங்குகளிலிருந்து தோன்றுகிறது. உணவின் அவசியமான சத்துக்களை நம் உடல் பெற்றுக் கொள்கிறது. உயிரினத்தால் உட்கொள்ளப்படும் உணவு அவ்வுயிரினத்தின் உடல் செல்களால் தன்வயமாக்கப்பட்டு வளர்ச்சியடையவும் உயிர் வாழவும் தேவையான ஆற்றலை வழங்குகிறது.

உணவின் தோற்றம்

பண்டைய மனிதர்கள் இறைச்சி உண்பவர்கள் என்ற பிரபலமான நம்பிக்கைக்கு மாறாக, தொல்பொருள் ஆய்வில், அவர்கள் ஏறக்குறைய சம அளவு இறைச்சி மற்றும் தாவரங்கள் சாப்பிட்டதாகக் கூறப்படுகிறது. தொல்பொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட ஏறக்குறைய 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பான களிமண் பானைகளை ஆராய்ந்ததில் அவை உடையக்கூடியவை மற்றும் மெல்லிய சுவர்கள் போன்றவை என்பதால் அவை உணவைச் சேமிப்பதற்காகவும் சமைப்பதற்காகவும் பயன்படுத்தினர் என்று யூகிக்க முடியும்.

உணவு உற்பத்தி

நடைமுறை கலாச்சாரத்தில் உணவுப்பொருட்களில் அதிக உற்பத்தியால் குறிப்பாகக் கோழி மற்றும் மாட்டிறைச்சி போன்றவை சாப்பிடப்படுவதாக பல்வேறு ஆவணங்கள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் உணவுக்காக விலங்குகளின் படுகொலை மற்றும் விலங்குகளை மோசமாக நடத்துதல் போன்ற கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டது. பெரும்பாலும் பெரிய நிறுவனங்கள் இலகுவாக வருவாய் ஈட்டுவதற்கு இத்தகைய முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கருதப்படுகிறது. சுற்றுச் சூழலுக்கு எதிரான தற்போதைய போக்குடன் சேர்ந்து மேற்கத்திய கலாச்சாரத்தில் உள்ள மக்கள் மூலிகை மருந்து உணவுகள் மீது ஆர்வங்காட்ட முற்பட்டுள்ளனர். பெண்கள், விளையாட்டு வீரர்கள், உணவுக் கட்டுப்பாட்டில் உள்ளவர்கள் என தனித்தனியாக உணவு வகைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

உணவுக்கான மூலங்கள்

பெரும்பாலான உணவுகள் தாவரங்களில் இருந்து தோன்றுகின்றன. சில உணவுகள் நேரடியாகத் தாவரங்களிடம் இருந்தும் சில உணவுகள் மறைமுகமாகத் தாவரங்களைச் சார்ந்தும் பெறப்படுகின்றன. உணவு ஆதாரங்களாகப் பயன்படுத்தப்படுகின்ற விலங்குகள் கூட தாவரங்களிலிருந்து பெறப்படும் உணவை உண்பதன் மூலம் வளர்கின்றன. தானியங்கள் ஒரு முக்கிய உணவு வகை ஆகும். இவையே உலகளாவிய அளவில் எந்த ஒரு வகை பயிரையும் விட அதிகமாக வளர்கின்றன. உலகளவில் உற்பத்தி செய்யப்படும் தானியத்தின் பெரும்பகுதி கால்நடைகளுக்கு உணவாக அளிக்கப்படுகிறது.

உணவின் பரிணாமம்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்று முன்னோர் சொன்ன வாக்கு உண்மை. இந்த உணவு மனிதனுக்கு எப்படி எல்லாம் கிடைக்கப்பெற்று பரிமாறப்பட்டது. எவ்வாறெல்லாம் சாப்பிடப் பெற்றது என்பதை எண்ணிப் பார்த்தால் அதன் பரிணாம வளர்ச்சி நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. அன்றைய உணவுப் பழக்கத்திற்கும் இன்றைய உணவுப் பழக்கத்திற்கும் எவ்வளவோ மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. கற்கால மனிதன் இலை தழைகளையும், முயல், மான்களை வேட்டையாடியும் வாழ்ந்தான். பச்சையாகச் சாப்பிட்டவன், சுட்டு சாப்பிடத் துவங்கினான். அதன் சுவையை ருசி கண்டான். இதன் விளைவாக மண்பாண்டம் செய்யத் தெரிந்த பின் சமைக்கக் கற்றுக் கொண்டான். பின், படிப்படியாக

எது சாப்பிட்டால் நல்லது, எந்த உணவு பலன் தருவது என அனுபவத்தில் கற்றுக் கொண்டான். பலரோடு சேர்ந்து விருந்துண்ணல் சிறப்பையும் புரிந்துகொண்டான், அறுசுவை படைப்பில் மன்னன் ஆனான்.

உணவு வகைகள்

சைவ உணவு, தாவரங்களிலிருந்து பெறப்படும் உணவு வகைகளைக் குறிக்கின்றது. சைவ உணவு, இறைச்சி, கடல் உணவு போன்ற அசைவ உணவுகளைத் தவிர்க்கின்றது. முட்டை பொதுவாகச் சைவ உணவாகக் கருதப்படுவதில்லை. விலங்குகளிலிருந்து பெறப்படும் பால் சைவ உணவா அசைவ உணவா என்ற கருத்தொற்றுமை இல்லை. அசைவ உணவு என்பது விலங்குகளின் இறைச்சியைக் கொண்ட உணவாகும். அது பெரும்பாலும் வீட்டு வளர்ப்பு விலங்காக இருக்கும்.

அறுசுவை

விலங்குகளால், குறிப்பாக மனிதர்கள் ஆறு வகையான சுவைகளை அறிய இயலும். பழங்கால இந்திய மருத்துவங்களும் ஆயுர்வேதமும் சுவைகளை ஆறு வகைகளாகப் பிரிக்கின்றன. இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, கார்ப்பு மற்றும் துவர்ப்பு என அறு சுவைகளாகும். மிக அதிக சக்தி வழங்கும் சுவைகளே மிகவும் உற்சாகமாக உட்கொள்ளப்படுகின்றன. மற்ற சுவைகள் சுவாரசியமானவையாகக் கருதப்படுவதில்லை.

உணவு முறை

"துரித உணவு என்றால் என்ன?"

புரதம், விட்டமின், கனிச் சத்துக்கள் மிகக் குறைந்த அளவு அல்லது அறவே இல்லாத மிகுந்த உப்பும், கொழுப்பும் கொண்ட உணவுகள் துரித உணவுகள் என்று வரையறுத்துள்ளது தேசிய சத்துணவு கழகம். துரித உணவுகளினால் தொற்று நோய் அல்லாத நீரிழிவு, இருதய நோய்கள், புற்று நோய்கள், பற்களில் வரும் நோய்கள் போன்றவை வருகின்றன என்று ரஷ்ய ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பொதுவாக துரித உணவுகளில் மிக அதிகமான அளவில் கொழுப்புச்சத்தும் சர்க்கரையுமே உள்ளன. ஆரோக்கிய உணவு என்றால் உணவுப்பொருள்களின் இயற்கையான நிறம், மணம், சுவையை இழக்காமலும், வைட்டமின்களையும், தாதுப் பொருள்களையும் பாதுகாப்பவையாகும். இயற்கை வைத்தியத்தில் தாது உப்புக்கள் நிரம்ப உள்ள இளங்கீரைகள், புதிதாய்ப் பறித்த இளங் காய்கறிகள், பழங்கள், தளிர்கள் முதல் தரமான உணவுகள் ஆகும்.

உணவுச் சங்கிலி

உணவுச் சங்கிலி என்பது ஒரு குறிப்பிட்ட சூழலில் வாழ்கின்ற உயிரினங்களுக்கு இடையிலான உணவுத் தொடர்பினை விளக்கும் சொற்றொடராகும். ஒரு வாழிடச் சூழலில் ஓர் உணவு மட்டத்திலிருந்து மற்றொரு உணவு மட்டத்திற்கு உணவும், ஆற்றலும் கடத்திச் செல்லப்படுவதை உணவுச்சங்கிலி விளக்குகிறது.

தமிழரின் சமையல்

தமிழர் சமையல், பல நூற்றாண்டுகளாகத் தென் இந்தியா, இலங்கை மற்றும் பிற நாடுகளில் வசிக்கும் தமிழர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட உலகின் சிறந்த சமையல்களில் ஒன்றாகும். இயற்கையுடனும் கால நிலைகளுடனும் இணைந்த ஒரு கிராமிய சூழலிலேயே இச்சமையல் வளர்ந்தது. பலவகை உணவுகளைச் சுவையுடன் சமைக்க விருந்தோம்பல் தமிழர் சமையற்கலை வழி சொல்கின்றது.

முடிவுரை

அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை உணவு என்பது முக்கியமானதாக அமைகிறது. தாவரங்களுக்கு நீர், சூரிய ஒளி போன்றவையும் விலங்குகளுக்குத் தாவரங்களும் சிறிய விலங்குகள் உணவாகின்றன. ஒரு மனிதனுக்கு உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இருப்பிடம் என்பது அடிப்படைக் காரணிகள் ஆகும். அப்படிப்பட்ட உணவில் கலப்படம் ஆக்கியுள்ளனர். இன்றைய காலங்களில் பெரும்பாலோர் உணவுப் பொருட்களின் விலை குறைவு என கலப்பட பொருட்களை வாங்குகின்றனர். உணவு என்பது மனிதர்களுக்கு முக்கியமாக அமைந்துள்ளது. அவற்றில் கலப்படம் உள்ளதைத் தவிர்த்து ஆரோக்கிய உணவுகளை உண்பது நம் உடலுக்கு நன்மை தரும்.

- ப.சதிஷ்குமார், முதலாமாண்டு முதுகலை தமிழ் இலக்கியம்

---

## சோழர் கால அளவை முறைகள்

தஞ்சை பெரிய கோவில் கட்டப்பட்டது எப்படி என்ற தகவலை அதைக் கட்டிய மாமன்னர் இராஜராஜனோ அல்லது வரலாறோ நமக்கு விட்டுச் செல்லவில்லை.

தஞ்சைப் பெரிய கோவிலைப் பார்த்து பிரமிக்கும் அனைவருக்கும் அதில் ஒரு கூடுதல் சுவாரசியம் இந்தக் கோயிலை எப்படி கட்டுமானம் செய்திருப்பர் என்பது தான்; பல நூற்றாண்டுகளாக வரலாற்று ஆய்வாளர்கள், சிற்பக் கலைஞர்கள், கட்டடக்கலை நிபுணர்கள் என அனைவரும் இதற்கான விடையைத் தேடுகிறார்கள், தேடுகிறார்கள், தேடிக்கொண்டே இருக்கிறார்கள்.


இதற்கான விடை இதுதான் என்று யாராலும் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. சில நிபுணர்கள், தஞ்சைப் பெரிய கோவில் கட்டிடத்தில் மொத்தம் எத்தனை கற்கள் பயன்படுத்தி இருப்பார்கள், அவற்றை எந்த முறையில் ஒன்றோடு ஒன்றாகச் சேர்த்துக் கட்டி இருப்பார்கள் என்று அனுமானித்து பலரும் பல ஆராய்ச்சி நூல்களை எழுதி இருக்கிறார்கள்.

சமீபத்தில் கூட இது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருப்பவர்களில் குறிப்பிடத்தக்கவர் தமிழ் சினிமா இயக்குனர் ஜனனாதன். இவர் பல தகவல்களைத் திரட்டி, அதன் மூலம் தஞ்சைப் பெரிய கோவில் இவ்வாறுதான் கட்டப்பட்டு இருக்க வேண்டும் என்று நிரூபிக்க தனது கணினியில் ஒரு வடிவமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

தஞ்சைப் பெரிய கோவில் பற்றி பல அறிஞர்களும், பல ஆண்டுகளாக நடத்தி வரும் இது போன்ற ஆய்வுகளில் இருந்து கிடைத்த தகவலின் சுருக்கத்தை இங்கே காணலாம். தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டுவதற்கு ஒன்றரை லட்சம் டன் எடை கருங்கற்களைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். கோவில் விமானம் மட்டும் 50 ஆயிரம் டன் எடை கற்களைக் கொண்டதாகும்.

இவ்வளவு எடை கொண்ட கற்களைத் தாங்கக்கூடிய கட்டமைப்பு, சிற்பிகளின் நுணுக்கங்கள் போன்றவற்றை இரகசியமாகவே விட்டுவிட்டு அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்குத் தேவையான நிலத்தையும், கற்களையும் அளப்பதற்கு எத்தகைய அளவுகளைப் பயன்படுத்தி இருப்பர் என்பதைப் பார்ப்போம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நாம், 12 அங்குலம் கொண்டது ஒரு அடி, 3 அடி கொண்டது ஒரு கஜம் என்ற அளவுகளைப் பயன்படுத்தினோம். அதுவே இப்போது மில்லி மீட்டர், சென்டி மீட்டர், மீட்டர் என்ற அளவுக்கு மாறிவிட்டது.



S.Surya II B.A.History

மன்னர் இராஜராஜன் காலத்தில், இருந்த அளவை முறை வித்தியாசமானது. ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக 8 நெல் மணிகளை வரிசையாக அடுக்கி வைத்தால், அதன் அகலம் "ஒரு விரல்" என்ற அளவு முறை அப்போது இருந்தது.

அதாவது "விரல்" என்பது நாம் பயன்படுத்திய அங்குலத்துக்குச் சமம். விரல் என்ற அளவை அங்குலம், மானங்குலம், மனம் என்ற பல பெயர்களில் அழைத்து இருக்கிறார்கள்.

6 விரல் அகலம் கொண்ட அளவையை தலம் என்றும், 12 விரல் அகலம் கொண்ட அளவையை விடஸ்தி என்றும், 24 விரல் கொண்ட அளவையை முழம் என்றும் அழைத்தார்கள்.

மெட்ரிக் முறைப்படி பார்த்தால், 10 விரல் அகலம் கொண்டது. 33 சென்டிமீட்டர். இந்த 10 விரல் அகலம் என்ற மூலாதர அளவுதான் தஞ்சைப் பெரிய கோவில் கட்டுமானத்தில் மூல அளவாகப் பயன்படுத்தி இருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

புதுச்சேரியைத் தலைமையிடமாகக் கொண்ட பிரான்ஸ் நாட்டுக் கட்டிடக் கலை நிபுணர் குழு, 1980-ஆம் ஆண்டு, சோழர்கால கட்டிடக்கலை பற்றிய ஆய்வுக்காகத் தாராசுரம் கோவிலுக்குச் சென்றனர். அவ்வாறு ஆய்வு செய்ய இந்திராகாந்தி தேசிய கலாச்சார மையம் கேட்டுக் கொண்டது. அதன்படி மேற்கொண்ட ஆய்வில் அதனைப் பற்றி புத்தகமாக வெளியிட்டனர்.

அதில், அவர்கள் தஞ்சைப் பெரிய கோவில், 10 விரல் என்ற அளவு முறையை விகிதாச்சாரமாகக் கொண்டு கட்டப்பட்டு இருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தனர்.

- மு.சுரேஷ்குமார், மூன்றாமாண்டு இளங்கலை வரலாறு

# இலஞ்சம் தவிர்த்து நெஞ்சம் நிமிர்த்து

முன்னுரை

இலஞ்சம் தவிர்த்து நெஞ்சம் நிமிர்த்து என்னும் இக்கட்டுரையில் நாம் பார்க்க இருப்பது அனைத்து பிழைகளுக்கும் ஊழல்தான் ஊற்றுக் கண்ணாய் இருப்பது என்பது பற்றியும் ஊழல் எவ்வித பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றியும் மக்களின் அவல நிலை பற்றியும் பார்க்கலாம்.

அரசியல்வாதிகளின் ஊழல் போக்கு

மக்களிடம் இருந்து ஒருவரை மக்களே தேர்ந்தெடுத்து மக்களுக்குத் தொண்டு செய்ய அமைக்கப் பட்டதே ஜனநாயகம் இதுவே மக்களாட்சி. ஆனால் தற்காலத்தில் இது மாறி பணநாயகமும், பணத்தின் ஆட்சியுமே நடைபெற்று வருகிறது.

பண நலனை நாடுபவன் ஒரு போதும் மக்கள் நலனில் நிற்க மாட்டான். ஊழல் என்பது ஏதோ பணப் பிரச்சினை அல்ல அதில் மனிதநேயம் இருக்கிறது. மானுடம் இருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதி இருக்கிறது. சுய ஒழுக்கம் இருக்கிறது. சுயமரியாதை இருக்கிறது. ஏன் நாட்டின் எதிர்கால நலனே அதில் தான் அடங்கி இருக்கிறது. எனவே மேற்கூறியவற்றுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக முந்தைய தலைவர்களான காமராஜர், கக்கன் போன்ற மாமனிதர்கள் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் உண்மையாக உழைத்து, தனது இறுதி மூச்சு உள்ளவரை நாட்டுப் பணி செய்து மறைந்த தலைவர்கள் வாழ்ந்த இத்திருநாட்டில் தற்போது இரத்த வெறி பிடித்தவர்கள் போல நாளுக்கு நாள் ஊழல்வாதிகள் அதிகரித்துக் கொண்டே செல்வது என்பது ஜனநாயகத்திற்கு மிகவும் ஆபத்தானது. இவர்களைக் களை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

அரசு அலுவலர்களும், அரசின் திட்டமும்

அரசு அலுவலர்கள் என்பவர்கள் மக்களுக்குச் சேவை செய்யவே. ஆனால் மக்கள் உழைத்து தன் இரத்தத்தை வேர்வையாகச் சிந்திக் கட்டும் வரிப்பணத்தில் தன் பாக்கெட்டுகளை நிரப்பும் அலுவலர்கள் உண்மையாகச் சேவை செய்கிறார்களா என்பது மிகப்பெரிய கேள்விக்குறியே!

உதாரணமாக, ஒரு கடைக்கோடி கிராமத்தில் வயதான மூதாட்டி ஒருவர் முதியோர் உதவித்தொகை கேட்டு அரசு அலுவலகத்திற்குச் சென்றார். அரசு ஊழியர்கள் சரியான ஆவணம் இல்லை என மீண்டும், மீண்டும் அலைக்கழிக்க, ஒரு நாள் அப்பாட்டியோ என்னதான் சாமி இல்லை எனக் கேட்க அவர்கள் 5000 ரூபாய் கொடுத்தால் வேலை சீக்கிரம் முடிஞ்சிடும் பாட்டி எனக்கூற, அம்மூதாட்டியோ நானே 100 நாள் வேலைக்குச் சென்று என் தள்ளாத வயதில் வாழ்க்கை ஒட்டிட்டு வரேன். என்கிட்ட போய் 5000 ரூபாய் கேட்டா நான் எங்க சாமி போறது என்ற அம்மூதாட்டியின் அழுகுரலைக் கேட்டும் கேளாத மனித மிருகங்களாய் வாழ்ந்து வரும் உயர் அதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை உள்ளனர். சமுதாயத்தில் இதுபோன்ற அவலநிலை மாறுவது எப்போது? அரசின் திட்டத்தை உரிமையோடும், அதிகாரத்தோடும் கேட்டு வாங்கும் உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ளது. ஆனால் கெஞ்சிக் கேட்டாலும் கிடைப்பதில்லையே ஏன்? அரசு அலுவலர்கள் மக்களுக்குச் சேவை செய்கிறார்களா? இல்லை மக்கள் அலுவலர்களுக்குச் சேவை செய்கிறார்கள்? என்ற கேள்வி ஒவ்வொரு குடிமகனின் மனதிலும் ஓடிக் கொண்டே உள்ளது.

**அரசுப் பணிகளில் மந்தநிலை**

அனைத்து துறைகளிலும் துறைவாரியாகப் பணிகளை மேற்கொள்ள ஊழியர்கள் அலுவலகத்திற்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் பணியைச் செய்வதைத் தவிர மற்ற காரியங்களில் முனைப்போடு உள்ளனர். ஏனென்றால் அவர்களைக் கண்காணிக்கும் உயர் அலுவலர்களும் மந்த நிலையிலேயே உள்ளதால் அடிமட்டம் வரை அனைவரும் தங்கள் நலனும் தங்கள் குடும்ப நலனும் பேணி வருகின்றனர். இதனால் பணத்தின் மீது நாட்டம் சென்று சாமானியர்களைத் தொல்லை செய்யும் வகையில் செயற்கை முறையில் கிடப்பில் போட்டு ஊழல் செய்வதற்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அத்தனையும் தெளிவாகச் செய்கின்றனர் மக்கள் சேவகர்கள்.

**சாமானியனின் நிலை**

மேற்கூறியவற்றையெல்லாம் அறிந்தும் அறியாது, அதை எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது மௌனமாய் அன்றாடம் மாடாய் உழைத்துப் பிழைக்கும் சாமானியனின் நிலையோ வேதனைக்குரியது. ஒரு தொழிலைச் செய்து அதில் வரும் வருவாயை நம்பி தன் குடும்ப செலவு, குழந்தைகளின் படிப்புச் செலவு, மருத்துவச் செலவு என சிறுசேமிப்பு கூட இல்லாத மனிதர்களாய். நாளையை நினைத்துக் கவலையோடு நாட்களைக் கடத்தும் சாமானியனின் நேர்மை எங்கே? ஊழலில் ஊறித் திளைத்தவர்கள் எங்கே?

**அனைத்து துறைகளிலும் ஊழல்**

பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தில் முட்டையில் ஊழல் செய்வதில் தொடங்கி, அரசுப் பேருந்தில் சரியான சில்லறை மக்களுக்கு கொடுக்காமல், நியாய விலைக் கடைகளில் நியாயமற்ற, தரமற்ற எடை குறைவான பொருட்களும், மின் இணைப்பு கேட்டால் லஞ்சம், பத்திரப் பதிவுத் துறையில் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு அளவற்ற ஊழலும், காவல் துறையில் அதிகார மீறலும், அதிகாரத் துஷ்பிரயோகமும், தரமற்ற சாலை அமைத்து விட்டு பல கோடி ரூபாய் கணக்கில் காண்பிப்பதும் பழக்கமாகிவிட்டது. அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளிடம் மனிதநேயமற்ற முறையில் நடப்பதும், விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதற்குக் கமிஷன் கேட்பது போன்ற நிகழ்வுகள் தினசரி வாடிக்கையாகிவிட்டது. இதை அனைத்தும் மக்கள் பிரதிநிதிகளும், உயர் அதிகாரிகளும் அறியாதது அல்ல. அனைவரும் அறிந்ததே. ஆனால் நடவடிக்கைதான் இல்லை. ஏனென்றால் அதைச் செய்வதும், செய்யச் சொல்லுவதும் அவர்களே. இதுவே சாமானியனின் ஆதங்கமாக உள்ளது.

**முடிவுரை**

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தவறாமல் தேர்தல் வருகிறது. அதிகாரத்தில் இருப்பவர்களும், அதிகாரிகளும் மாற்றப்படுகிறார்கள். ஆனால் இந்த ஊழல் மட்டும் மாற்றப்படவில்லை. ஐயா அப்துல்கலாம் அவர்களின் கனவான இந்தியாவை வல்லரசு நாடாக மாற்ற வேண்டும் என்பதே இது சாத்தியமா தற்போது? அனைத்து துறைகளிலும் மாற்றம் தேவை. சுய ஒழுக்கம் அதிகாரத்தில் இருப்பவர்களுக்குத் தேவை. காசு வாங்காமல் ஓட்டு போடும் மக்கள் வேண்டும். தன்னுடைய அதிகாரத்தைக் கேட்டுப் பெறக் கூடிய அளவுக்கு மக்களுக்கு அறிவு ஒளி வேண்டும். அநீதியைக் கண்டு கேள்வி கேட்கும் மக்கள் வேண்டும். உரிமையை விட்டுக் கொடுக்காத தலைவன் வேண்டும். அரசு உயர் அதிகாரிகள் முதல் கடைநிலை ஊழியர் வரை தங்கள் கடமையை உண்மையாகவும், உளச்சான்றின்படியும், நேர்மையுடனும் நிறைவேற்றினால் போதும் அரசின் திட்டங்களும், பயன்களும் சரியான நேரத்தில் கடைக் கோடி மக்களைச் சென்றடையும். இதன் மூலம் ஏற்றத்தாழ்வுகள் குறையும். சமுதாய மலர்ச்சி ஏற்படும். இதன் விளைவாக நாடு முன்னேறி வல்லரசாக மாறும். அப்போது தான் அப்துல்கலாம் ஐயா அவர்களின் கனவு மெய்ப்படும்.

- தே.சஞ்சய், மூன்றாமாண்டு இளநிலை வணிகவியல்

## சுட்ட கதை சுடாத நீதி

காதலித்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டான் அவன். ஆனால் எந்தப் பெண்ணையும் காதலிக்க முடியவில்லை. குழப்பமாக இருக்கிறது என்றபடி அந்த குருவிடம் போய் நின்றான். நல்ல வேலையில் இருக்கிறான். வசதியானவன். கம்பீரமாகவும் இருந்தான்.

குரு அவனைப் பார்த்து சிரித்தார். பக்கத்திலிருந்த சோளத் தோட்டத்தைக் காட்டினார். "அங்கு போ! இருப்பதிலேயே பெரிதான சோளக் கதிரைப் பறித்து வா. ஒரே நிபந்தனை. போன பாதையில் திரும்பி வந்து ஏற்கனவே பார்த்ததைப் பறிக்கக்கூடாது.

இளைஞன் போனான் முதல் வரிசையிலேயே ஒரு பெரிய சோளக்கதிர் இருந்தது. கொஞ்ச தூரத்தில் பார்த்தால் அதைவிடப் பெரியதாக இன்னொன்று தெரிந்தது. தோட்டம் ரொம்பப் பெரியது. இன்னும் உள்ளே போனால் பெரிதாக கிடைக்கும் என்று நடந்தான். கொஞ்ச நேரத்தில் மிகப்பெரிய சோளக்கதிர் அவனைச் சுண்டி இழுத்தது. அதையும் அலட்சியம் செய்துவிட்டு நடந்தான். நடக்க நடக்க அவனுக்கு ஒரு உண்மை புரிய ஆரம்பித்தது. தோட்டத்தின் இந்த பக்கத்தில் இருக்கும் கதிர்கள் எல்லாமே சிறியதாக இருந்தன. பெரிய கதிர்களை அவன் இழந்துவிட்டான். எனவே வெறுங்கையோடு தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்து குரு முன்பாக நின்றான்.

குரு சிரித்தார், "இன்றைய இளைஞர்களின் பிரச்சினையே இதுதான்!" இதைவிடச் சிறந்தது வேண்டும் என நினைத்து கிடைக்கும் ஒவ்வொரு துணையையும் புறக்கணிக்கிறார்கள். அந்தத் தேடல் வெறுமையில் முடியும் போது அவர்களுக்குப் புரிகிறது. கிடைத்த நல்ல துணையை இழந்து விட்டோம் என்பது. வாழ்க்கையில் ரிவர்ஸ் கியர் போட்டு அதை அடைய முடிவதில்லை.

அப்போ என் கல்யாணமும் இப்படித்தான் ஆகுமா?

இல்லை என்று அந்த இளைஞனின் தோள்களை ஆதரவாகப் பிடித்தபடி குரு சொன்னார்.

இப்போது அந்தத் தோட்டத்துக்கு அனுப்பினால் உஷாராகி விடுவாய். கையில் பறித்த ஏதோ ஒரு கதிரைப் பிடித்து பறித்து இருந்தால் இது தான் பெரியது என்று திருப்தியடைந்து விடுவாய். அது தான் பெரியது என்று நம்புகிறாயே, அந்த நம்பிக்கை உனக்கு கை கொடுக்கும். நம்பிக்கைகள்தான் உறவுகளை உறுதியாக்குகின்றன.

- என்.நேசிகா, மூன்றாமாண்டு இளங்கலை வரலாறு

---

## கொரோனாவும் வாழ்க்கை முறை மாற்றமும்

காலச்சக்கரத்தில் ஒவ்வொரு நிலையிலும் இந்த பூமியைப் புரட்டிப் போடக் கூடிய ஒரு நிகழ்வு நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதில் சில நிகழ்வுகள் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டு நடப்பவை. சில நிகழ்வுகள் மனிதனின் முறையற்ற செயல்பாடுகளால் ஏற்படுபவை. ஒரு நோயைப் பற்றிய அச்சம் நமது சிந்தனையை அபூர்வமாகத்தான் பாதிக்கும். கடந்த மார்ச் 2020 முதல், ஒவ்வொரு செய்தித்தாள்களிலும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று குறித்து முன்பக்கத்தில் செய்திகள் வருகின்றன. வானொலி, முகநூல், ட்விட்டர் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அடுத்தடுத்து, சமீபத்திய மரண எண்ணிக்கை குறித்துச் செய்திகள் சொல்லப்படுகின்றன. சமூக ஊடக தளங்களில் பயமுறுத்தும் புள்ளி விவரங்கள், நடைமுறை ஆலோசனை அல்லது நகைப்புக்குரிய பல விஷயங்கள் பரவிக் கொண்டிருக்கின்றன.

கொரோனா இந்த ஆண்டில் இதுவரையில் பெரும்பாலான மக்களால் அதிகமாக பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தையாக மாறி இருக்கிறது. அந்த அளவுக்கு மனித குலத்தில் இந்தத் தொற்று ஒரு அசாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கொ.மு., கொ.பி. என்று சொல்லத்தக்க விதத்தில் கொரோனாவுக்கு முந்தைய வாழ்க்கை கொரோனாவுக்குப் பிந்தைய வாழ்க்கை என்று இன்றைய தினம் இந்தக் கொரோனா மனித வாழ்க்கையை அடியோடு புரட்டிப் போட்டிருக்கிறது. கொரோனாவினால் ஏற்பட்ட மரணங்களின் குடும்பங்கள் இவ்வுலகில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இறுதிச் சடங்குகளில் கூட கலந்து கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டது வார்த்தைகளால் சொல்லி மாளாது.

இன்று உலகத்தையே உலுக்கிக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் பாதிப்புகள் இயற்கையாக ஏற்பட்டதா? என்ற விவாதம் ஒரு பக்கம் இருந்தாலும் ஒரு நிதர்சனமான உண்மை என்பது இந்த வைரஸ் அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, விஞ்ஞானம், கல்வி, தொழில்நுட்பம் என்று மனித வாழ்க்கையின் அனைத்து துறைகளையும் அது புரட்டிப் போட்டிருக்கின்றது. அதனுடைய ஆதிக்கம் ஒரு உலகக் கலவரமாகவே தொடர்கின்றது.

பெரியவர்களுக்குத் தொற்றுநோயால் ஏற்படும் மன அழுத்தம் தெளிவானது. வெளிப்படையானது. ஆனால், குழந்தைகளுடைய மனநலத்தின் மீதான கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் மிகவும் சிக்கலானது. குழந்தைகள் மென்மையானவர்கள். அவர்களின் அறிவாற்றலும் உணர்வு முதிர்ச்சியும் பெரியவர்களைப் போன்று இருப்பதில்லை. இதனால், பெருந்தொற்றால் வீட்டுக்கு உள்ளும் வெளியிலும் ஏற்படும் மாற்றங்கள் குழந்தையின் மன ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதித்துள்ளன. பயம், ஏமாற்றம், சோகம், கவலை, கோபம், இழப்பு போன்ற எதிர்மறை உணர்வுகள் குழந்தைகளுக்கு ஏற்படுவது அசாதாரணமானதல்ல. ஆனால், கோவிட்-19 தொற்று நோயின் நீடிப்பு, கட்டுப்பாடுகள், பரவும் தன்மை போன்ற தீவிர இயல்புகள் நிலைமையை மோசமாக்கியுள்ளன.

மின்னணுத் திரையே கதியென்று இருப்பது, குடும்ப உறவுகளில் ஏற்படும் உரசல்கள் அல்லது மன அழுத்தங்கள், வீட்டிலேயே முடங்கியிருக்கும் வாழ்க்கை முறை ஆகியவை கூடுதல் சவால்களைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்துகின்றன. ஆனால் இன்று பள்ளிகள் திறக்கப்பட்டும் இயல்பு நிலை திரும்பவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

ஒட்டுமொத்த மனித குலத்தின் இன்றைய தேவை இந்நோயில் இருந்து மக்களைப் பாதுகாப்பது எப்படி என்றும், இழந்த பாதிப்புகளால் ஏற்பட்ட தாக்கங்களில் இருந்து மீண்டு வருவது எப்படி என்பது ஒரு பக்கம் இருந்தாலும் இன்னொரு பக்கம் இந்த இடர்ப்பாடுகளை வாய்ப்பாகப் பயன்படுத்தி மக்களின் எண்ணங்கள் மற்றும் செயல்பாடுகளில் ஒரு ஆக்கப்பூர்வமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு வாய்ப்பாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இது தகவல் பரிமாற்றத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தி உள்ளது. அதுவும் அவரவர் உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதால் மக்கள் மத்தியில் பயத்துடன் கூடிய விழிப்புணர்வைப் பார்க்க முடிகிறது. இந்தப் புதிய அத்தியாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நமது வாழ்க்கை முறையில் சில நல்ல மாற்றங்களை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் அச்சத்தால் இன்று மக்கள் கைகளைக் கழுவுவதைப் பரவலாகப் பார்க்க முடிகிறது. தும்மும் போதும், இருமும் போதும் கடைபிடிக்க வேண்டிய இங்கிதங்களை இயல்பாகவே பழக்கப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பாக மாறியுள்ளது. தவறான செயலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இதைவிட சிறந்த தருணம் இருக்க முடியாது. கொரோனா வைரஸ் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பாதிக்கப் பட்டவர்களிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுவதற்கு வாய்ப்பு அதிகமாக இருப்பதால் அதைத் தவிர்க்க வேண்டும் என்ற அறிவுரையை நம்முடைய மனதில் பதிய வைத்து பழக்கவழக்கமாக மாறுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக மாறியுள்ளது.

ஒவ்வொரு நபரும் நோய்களை உருவாக்கும் இயந்திரமாகச் செயல்படாமல் நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொடுக்கும் நடமாடும் கல்விக் கூடங்களாக மாறுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக மாறி உள்ளது.

பூமித்தாயைப் பேராசையின் காரணமாக தாறுமாறாக அழிப்பதை விட்டுவிட்டு சுற்றுப்புற சூழலின் வழங்கும் சக்தியை மீறி ஆதிக்கம் செலுத்தாமல் அளவோடு பயன்படுத்த வேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் சொன்னது போல தேவைக்குப் பயன்படுத்திப் பேராசைக்கு இடம் கொடுக்காமல் சுற்றுப்புறச் சூழலைப் பேணி, மரங்களைப் பாதுகாத்து மாசுபடுத்துதலைக் குறைத்து மற்ற உயிரினங்களுக்கும் உரிய இடத்தைக் கொடுத்து ஆதிக்க வாழ்க்கையில் இருந்து விடுபட்டு, ஆக்கிரமிப்பு மனநிலையைத் தவிர்த்து வாழும் வாழ்க்கை முறை, ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை என்பதையே சுட்டிக் காட்டுகிறது கொரோனாவில் ஏற்பட்ட மரணங்களின் இழப்புகளும் மற்றும் வேதனைகளும். மேற்சொன்ன வழி முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் தனிப்பட்ட மற்றும் குடும்ப உறுப்பினர்களைக் கொரோனா வைரஸ் நோயிலிருந்து பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தலாம்.

பொதுவாகவே மக்களுடைய வாழ்க்கை நடைமுறைகள், பழக்கவழக்கங்கள், சமூகநீதி சார்ந்த செயல்பாடுகள் என்பவற்றில் கொரோனா வைரஸ் நீண்டகால மாற்றத்திற்கான அடித்தளத்தை இட்டிருக்கின்றது. இது சமூகவியல் ரீதியானது மட்டுமல்ல உளவியல் ரீதியானது என்று உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். மொத்தத்தில் கொரோனாவின் பாதிப்பு என்பது மனித வாழ்வில் பெரிய மாற்றத்திற்கு வழி அமைத்திருக்கின்றது.

நாமும் இந்த உலகமும் கொரோனாவை வெல்வோம் என்று நம்புவோம்.

- முனைவர் இரா.சங்கர், உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை

---

## அனுபவப் பாடம்

நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஊடகங்கள் அதிவேகத்தில் வரிசையாக வந்து நின்றது. பதினைந்தடுக்கு உயரமான ஆடம்பரக் கட்டிடம் ஒன்று கம்பீரமாய் எழுப்பப்பட்டிருந்தது. அதன் வெளியே சிவா இன்டஸ்ட்ரீஸ் என்ற ஒட்டுப் பலகை பெரிதாகத் தொங்கவிடப் பட்டிருந்தது. வாஷிங்டன் நகரில் வசிக்கும் அவர், உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவர். வெறும் ஐந்தே வருடங்களில் உலகின் மிகப்பெரிய பணக்காரர் பட்டியலில் ஒருவராகச் சேர்ந்தவர். அவரைப் பேட்டி காணவே ஊடகங்கள் வந்திருந்தன. நிறுவனச் செயலாளரிடம் அனுமதிப் பெற்று மிகப்பெரிய குளிர்சாதன அறை ஒன்றுக்கு அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். சில நிமிட காத்திருப்பிற்குப் பின், நான்கைந்து செயலாளர்களோடு கம்பீரமாய் உள்ளே நுழைந்த அவரை, அனைவரும் ஆச்சரியத்தோடு வரவேற்றனர். பின் ஒன்றன் பின் ஒன்றாகக் கேள்விக் கணைகள் வீசப்பட்டன.

உங்களின் இத்தகைய வெற்றிக்குக் காரணம் உங்களின் பின்புலமா? நீங்கள் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதே எளிதில் இவ்விடத்தைப் பிடிக்கக் காரணமா? என்ற ஒருவரின் கேள்விக்கு அவர் அளித்த பதில் அனைவருக்கும் ஆச்சர்யத்தைத் தந்தது. உண்மையில் முன்னொரு காலத்தில் ரோட்டோரத்தில் பிச்சைக் கேட்டு கையேந்திக் கொண்டிருந்த சிறுவனே உங்கள் முன் அமர்ந்திருக்கும் சிவா இன்டஸ்ட்ரீஸ் எம்.டி. சிறுவயதில் ஆதரவற்று உணவுக்காகக் கையேந்தி நின்றபோது அருகில் சாதாரண உணவுப் பொட்டலக்கடை போட்டிருந்த ஒருவர் புன்னகையோடு என் பசியாற்ற, அன்றிலிருந்து அவருடனே தங்கி வேலைப் பார்க்கத் துவங்கினேன்.

அவரின் கைப்பக்குவம் அறிந்து ஆட்கள் சூழ, கடை பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. ஒரு நாள் எதிர்பாராத விதமாக செல்வந்தர் ஒருவரின் சதியால் கடை ஆக்கிரமிக்கப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்படவே, வங்கியில் கடன் வாங்கி கடை நடத்தி வந்தார். கடனைத் திருப்பித் தர தாமதம் ஏற்பட்டது. இப்படி வாழ்வில் பல்வேறு அடிகளும், அவமானங்களும் அவரைச் சூழ, தளராமல் உழைத்துக் கொண்டே இருந்தார். சில வருடங்களில் மிகப்பெரிய ஹோட்டல் ஒன்றுக்கு அதிபரானார். வாழ்வில் எத்தனை தடைகள் இடைமறித்தாலும் களைத்துப் போய் வீழ்ந்து விட்டால், நம்முடன் சேர்ந்து கனவுகளும் களைத்து கனவாகவே போய் விடும். அவமானங்களை அடிகளாகக் கண்டு துவண்டு விடுவதை விட, அவற்றை ஓர் அனுபவமாக எடுத்துக் கொண்டு வாழ்வில் அடுத்த அடியை நோக்கி நடப்பதே புத்திசாலித்தனம். அவரிடம் நான் கற்றுக் கொண்டதே இந்த அனுபவப் பாடம் எனச் சொல்லி முடித்ததும் அனைவரும் வாழ்வில் தன் அடுத்த அடியை நினைத்த சிந்தனையில் ஆழ்ந்து விடவே அரங்கமே ஒரு நிமிடம் அமைதியானது.

- க.யுவஸ்ரீ, இரண்டாமாண்டு இளநிலை வணிகவியல்

## ONLINE EK BHARATH SRESTHA BHARATH

தேசிய மாணவர் படை சார்பாக 25 ஜனவரி முதல் 30 வரை EBSB - EK Bharath Srestha Bharath எனும் Camp நடத்தப்பட்டது. கொரோனா முன்னெச்சரிக்கை காரணமாக முதல் முறையாக Online-ல் நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, அந்தமான் நிக்கோபார், பஞ்சாப் மற்றும் சட்டீஸ்கர் ஆகிய மாநிலங்களை சேர்ந்த மாணவர்கள் பங்கு பெற்றனர். இதில் நம் கல்லூரி மாணவன் S.பிரபாகரன் தேர்வு செய்யப்பட்டார். EBSB எனும் Camp-ல் தனது மாநில மொழி சிறப்பு, பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியவற்றை மற்ற மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொண்டனர். குடியரசு தின நாளும் கொண்டாடப்பட்டது. இதில் 170 மாணவர்கள் பங்கேற்றனர். நமது தமிழ்நாட்டில் 90 மாணவர்கள் பங்கேற்றனர். கோவை குரூப் சார்பாக நமது கல்லூரி மாணவர் பங்கேற்றார்.

- CUO S.பிரபாகரன், மூன்றாம் ஆண்டு இளநிலை சர்வதேச வணிகம்

## கோஹினூர் வைரம்

உலகப் புகழ் பெற்ற கோஹினூர் வைரம், ஹைதராபாத்தில் உள்ள கோல்கொண்டா வைரச்சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டதாகும். இந்த வைரத்திற்குச் சொந்தக்காரர் கி.பி.1304 இல் மாவள தேசத்தை ஆண்ட ராஜா மாஹிலக்கியா ஆவார். 1526-இல் டெல்லியை கைப்பற்றிய பாபரின் கைக்கு கோஹினூர் வைரம் சென்ற பின் பாபரின் வைரம் என்றழைக்கப்பட்டது.

பின்னர் ஆங்கிலேய கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபுவால் இங்கிலாந்து அரசு விக்டோரியா மகா ராணிக்கு அளிக்கும்படி கட்டாயப்படுத்தி பறிக்கப்பட்டது. மகாராணி அந்த பழமையான வைரத்தை மிகவும் நேசித்தார். போரின் போது நெருப்பில் விழுந்து மங்கியிருந்த கோஹினூர் வைரம் 8000 பவுண்டுகள் செலவு செய்யப்பட்டு மெருகூட்டப்பட்டது. லண்டன் டவர், ஜூவல்ஸ் ஹவுஸில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

- V.நந்தகுமார்,

மூன்றாம் ஆண்டு இளநிலை வணிக நிர்வாகவியல் துறை

## தமக்கை (அவளும் ஒரு தாயே)

இரத்த உறவாக உடன்பிறந்து
சொந்த உறவாக உயிர்பெற்று
சிறு சிறு சண்டைகளில் அறிமுகமாகி
பெரிய குறும்புகளில் உடனிருந்து
தாய்க்குப் பின் தமக்கையாக மாறி
உரிய காலம் வரை உடனிருந்து
உரிய நேரம் வரும் போது
விட்டுப் பிரிபவளே
கோபத்திலே ஒரு தாயாகவும்
பாசத்திலே ஒரு தந்தையாகவும்
அன்பிலே ஒரு குழந்தையாகவும்
மாறி சிறகடிப்பவளே
அவள் சிரிப்பிலே அகிலமும் ஆகி
தங்கையே அவள் உயிர் எனவும் ஆகி
அவளும் ஒரு தாயே என
நிரூபிக்கிறாளே...!

## கயவர்கள் (கெட்டவர்கள்)

உன்னைத் தொட்டவன் எவனாகவும்
ஏன் அந்த எமனாகவும்
கூட இருக்கலாம் ஆனால்
மறுமுறை தொட நினைக்கும் போது
அவன் பார்த்து நடுங்கும்படியான
"கவசகுண்டலமாக" மாறிவிடு!!!

- கௌசல்யா கணேசன்,
இரண்டாம் ஆண்டு இளநிலை கணினி பயன்பாட்டியல்

## அம்மா

தன் உடல் வழி உடல் தந்து
உதிரத்தை உணவாகத் தந்து
உயிருக்கு உணர்வுகளைத்
தந்தவள் தாய்!
உன் போல் யாரும் இல்லை
உன் அன்புக்கு இணை ஏதும் இல்லை...

- செ.ரா.தீபக் குழந்தை ராஜ்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்



## நண்பன்

தட்டிக் கொடுக்க நண்பன் இருந்தால்
வேதனை கூட சாதனையாகும்...
எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல்
இணையும் ஒரே உறவு நட்பு...

- ஜெ.திராவிடன்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்



## என் தாயின் பாடு (போராட்டம்)

சிறு வயதிலே
பெற்றவர்களுக்காகப் பாடுபடத்
தொடங்குகிறாள்
பூப்படைந்தவுடன்
உற்றார் உறவினர்களின் தூற்றுதலால்
தன் சிறகுகளை முடக்குகிறாள்
முடக்கிய சிறகுகளை
விரிக்க நினைக்கும் நேரத்தில்
திருமணம் என்னும் கால்கட்டை
விரும்பியோ, விரும்பாமலேயோ
ஏற்றுக் கொள்கிறாள்
வாழ்க்கை என்பதே
இதுதான் என்று புரியும் தருணத்தில்
"தாய்"
என்னும் பட்டம் பெறுகிறாள்...
அத்துடன் முடிந்ததா அவள் பாடு ...??
இல்லை...
தான் பட்ட கஷ்டத்தைத் தன்
பிள்ளைகள் படக் கூடாது என வைராக்கியத்தோடு
மறுமுறை பாடுபடத் தொடங்குகிறாள்
தன் கால்கள் பொசுங்கினாலும்
தன் பிள்ளையின் கால்கள் பொசுங்கக் கூடாது
என்று ஒரு செருப்பைப் போல்
தேய்கிறாள்... என்னைப் பெற்றவள்...
பிள்ளைகளைக் கண்ணியத்துடன்
வளர்த்து, படிக்க வைத்து, வேறொருவருக்கு
மணமுடித்து அனுப்பியதோடு
முடிந்து விட்டதா அவள் பாடு...???
இல்லை...
கட்டியவனுக்காகச் சாவுமேடை
செல்லும் வரையில் தொடருகிறது
அவளின் உயிர்ப் போராட்டம்!!!

- கௌசல்யா கணேசன்,
இரண்டாம் ஆண்டு இளநிலை கணினி பயன்பாட்டியல்

## பெண்ணாகும் தமிழ்

அழகின் இலக்கணமோ
ஆதியின் பெருந்தவமோ
இதழின் கரும்புள்ளியோ
ஈழத்தின் இன்மொழியோ
உடலின் உயிரதுவோ
ஊமையின் குரலதுவோ
என்னில் கலந்ததுவோ
ஏகாந்த மலரதுவோ
ஐயோ...
ஒளியின் ஒலியதுவோ
ஓதா மறையதுவோ
ஔவையின் அறிவதுவோ
பெண்ணாகும் தமிழ்

- ராம்குமார் அறிவழகன்,
மூன்றாமாண்டு இளநிலை வணிகவியல்

## புது விடியல்

இளைஞனே ... நீ
மின்மினிப் பூச்சியாய் - இன்றி
வானில் உலாவரும் - பொன்
நிலாவாய் - நித்தம்
உலாவர - உன்னை
உயர்த்தி நில்...
உலகமே உன் கடைக்கண்
பார்வைக்கு...
தவமாய் தவம்கிடக்கும்...
புலம்பல்களை - தூர ஒதுக்கி
பூபாள - நாயகனாக
மக்களின் மனங்களில் - ஒளிர
உன் புது விடியலுக்கு-வாழ்த்துக்களை-
விண்ணதிரப் பரிசளிப்போம்...!

- முனைவர் சு.பொன்னைய
உதவிப் பேராசிரியர் வணிகவியல் து

### வாக்கு

தேர்தல் எனும் நான்கு எழுத்து
வாக்கு எனும் மூன்று எழுத்து
தீர்மானம் நம் ஐந்து வருட தலையெழுத்து

### வாழ்க்கை

ஒரு தொடர் ஓட்டம்
தொடக்கம் - கருவறை
முடிவு - பிணவறை

### நட்பு

மூன்று எழுத்து கவிதை
முற்றிலும் திறந்த உறவு

### மழை

மேகத்தின் கண்ணீர்
நிலத்தின் உயிர்நீர்

### கைப்பேசி

உள்ளங்கையில் உலகம் எனக் காட்டி
உறவுகளைத் தொலைக்கச் செய்தவன்

### ஆசிரியர்

கல்லூரி என்னும் விளக்கில்
புத்தகம் எனும் எண்ணெய் ஊற்றி
அறிவு ஒளியைத் தரும்
அணையாத திரி

### கண்ணாடி

இதுவரை என்னை
ஏமாற்றாத பொருள்

### வகுப்பறை

மீண்டும் அமர முடியாத
சிம்மாசனம்

- சு.அரவிந்த்,
இரண்டாம் ஆண்டு இளநிலை கணினி பயன்பாட்டியல்

---

### பருவ காலம்

வாடை காலத்தில் வருந்தினாலும்
கார் காலத்தில் கவலை கொண்டாலும்
வெயில் காலத்தில் வேதனை அனுபவித்தாலும்
வசந்த காலமாக
நம்பிக்கை மிளிர்ந்தால்
காலம் நம் கைகளில்...

### வருடப் பிறப்பு

புது காலண்டர் எடுத்து
இந்த வருஷம் எவ்ளோ லீவுனு
பார்க்கறதே தனி சந்தோஷம்

### காதல்

கல்லூரி காதலில்
வெற்றியோ, தோல்வியோ
ஆனால்
வருகைப் பதிவில் கண்டிப்பா
விருது கிடைக்கும்

### தோல்வி

உன்னை மிதித்துச் சென்றால்
வெற்றி கிடைக்கும் என நினைத்தேன்
ஆனால், உன்னோடு
ஆலோசித்துப் பயணிக்கச் செய்கிறது
நீ கொடுத்த வலி
வெற்றியின் பாதையில்

- மோ.சித்ராதேவி,
இரண்டாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## இளமையின் காதல் பார்வை

பெண்ணே உன்னை நான் நினைக்கிறேன்
நினைக்கையில் என் மனதை நானே வெறுக்கிறேன்
ஏனெனில்?
என் காதலை உன்னிடம் சொல்லாமல் இருப்பதால் தான்...
காரணம் உன் பெயர் கூட என்னவென்று தெரியவில்லை
ஓராயிரம் பெண்கள் என்னைக் கடந்து சென்றாலும் அவர்களை
எல்லாம் தலை நிமிர்ந்து பார்க்காத என் கண்கள்
நீ நுழைவாயிலில் நுழையும் போதே
என் காதில் உன் காலின் கொலுசொலி கேட்க
தலை நிமிர்ந்து உன்னை நான் பார்க்க
நீ என்னைப் பார்த்தும் பார்க்காமல் போக...
அதை நான் பார்க்க அந்நிலையில் என் உடம்பில்
படபடப்பும் புல்லரிப்பும் சந்தோஷமும்
ஒரே நிலையில் நிற்கும்
பின்பு நான் உன்னைப் பார்க்க நீ
என்னைப் பார்ப்பாய் என்று?
நீ என்னைப் பார்க்க நான் உன்னைப்
பார்ப்பேன் என்று?

நான் உன்னிடம் காதலைச்
சொல்ல முன் வந்தேன் பின்பு
அதைத் தவிர்த்தேன்
காரணம்?
உனது நடையின் அழகாலும்
உனது கொலுசின் ஒலியாலும்
உன் கண் என்னைப் பார்த்த
விதத்தாலும்
நான் உன்னை அளவு கடந்து
காதலித்து விட்டேன்
அதனால் உன் பெயர் கூட கேட்க
முன்வரவில்லை...
இதுவே நான் உன்னிடம்
காதலைச் சொல்லாத காரணம்
காதலி...

- R.சின்ராசு,
இரண்டாம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியம்

---

## பொன்மொழிகள்

வாழ்வில் முதற்படி என்றுமே
தோல்விப்படி - அதைத்
தாண்டாமல் வெற்றிப் படிகள் இல்லை

முடியாது என்ற சொல்லுக்கு
முட்டுக்கட்டைப் போடு
முடியும் என்ற சொல்லுக்கு
ஏணிப் படி போடு

கடந்த காலத்தின்
கசப்பான பக்கங்களைத்
திருப்பிப் படித்துப் பார்க்க எண்ணாதே
அதன் முடிவுப் பக்கத்தோடு
முடித்துக் கொண்டு
புதிய பக்கத்தை உருவாக்கு

கடந்த காலத்தைக்
கடந்து செல்ல கற்றுக்கொள்
நிகழ் காலத்தின்
நிஜங்களில் வாழ கற்றுக்கொள்
எதிர்காலத்தை எதிர் கொண்டு
நிற்க கற்றுக்கொள்
ஆனால் இதில் எதையும்
எதிர்பார்த்து மட்டும் வாழப் பழகாதே

- க.யுவஸ்ரீ,
இரண்டாம் ஆண்டு இளநிலை வணிகவியல்

## வாழ்க்கை ஒரு கேள்விக்குறி (?)

வாழ்க்கை அனுபவத்தை
வார்த்தையில் சொல்ல
வார்த்தைகளைத் தேடியபோது
வார்த்தை அகப்படாமல்
வெற்றிடமே மிஞ்சியது.
வாழ்க்கை
வெற்றிடமா...? அனுபவமா...?

குழந்தையாய்ப் பிறந்ததும்
அழுத அழுகைக்கு
விபரம் தெரிந்த பின்பும்
அர்த்தம் புரியாமல் போனது.
வாழ்க்கை
அர்த்தமற்றதா...? அனுபவமா...?

ஏட்டுப்படிப்பில் தேர்ச்சி பெற்றும்
எட்டாக் கனியாய் போனது வேலை.
விரும்பிய வேலை
கானல் நீராய் மறைந்துபோனது.
வாழ்க்கை
கனவின் கூடாரமா...? அனுபவமா...?

வயதின் விளையாட்டில்
விபரீதம் தெரிந்தும்
மானசீகமாய் வசீகரிக்கப்பட்டு...
நிதர்சனம் புரிந்து போனதும்
மனம் வெறுமையாய் ஆனது.
வாழ்க்கை
வசீகரமா...? அனுபவமா...?

வாழ்க்கை
அனுபவம் தானோ - என
மனம் அசை போடும்போது,
முதுமை மெதுவாய்
தன்பக்கம் வசப்படுத்தி
போதும் நீ வாழ்ந்தது
போகும் காலம் வந்தது - என
கண்களைக் கண்ணீர் தழுவும்போது,
இரு துளிக் கண்ணீர் சொன்னது
வாழ்க்கை
அனுபவம்தான்...!
வாழ்க்கை முழுவதும்
அனுபவம்தான்!!

முனைவர் பா. ராஜசேகரன்
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை

## காதல்

உன்னுள் விதைக்கப்படாத
என் அன்பை
என்னுள் புதைத்து வைத்திருக்கிறேன்
அது மௌனமாக இருந்தாலும்
வெளிப்பட்டு விடுகிறது
கவிதை வடிவில்...

- M.அன்பரசன்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## தமிழ்

ஒரு மொழியினால் மனிதனை வீழ்த்த
முடியுமாக இருந்தால்...
அது தமிழினால் தான் இருக்கும்...!!

- செ.இளமுருகன்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## பள்ளி

இன்னும் நினைவிருக்கும்
பள்ளியும் படிப்பும்,
பட்டமும் பல கதையும்,
சுற்றியும் உடன்பிறப்புகள்,
சும்மாவே திரிந்த பொழுதுகள்,
எண்ணங்கள் ஏதுமில்லை,
இலட்சியமும் ஒன்றுமில்லை,
இன்று எல்லாம் மாறிப்போச்சு...
இதயம் முழுக்க வலியாய் ஆச்சு.

ஒரு காலத்தில்
சந்தோஷப் பறவைகளும்
நட்பு பறவைகளும்
குடியிருந்த
நினைவுக் கூடு பள்ளிக்கூடம்

கண்களில் சிறு கண்ணீரும்
மிட்டாய் கிடைக்கும் என்ற ஆசையுடனும்
மஞ்சப்பைக்குள் சிலேட்டுடன்
முதல் நாள்
எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்
என்று சொல்லி கைநாட்டு

இட்டுச் சென்ற என் தந்தை
பள்ளி காலை வழிபாட்டில்
திருக்குறள் விளக்கம்
திணறிச் சொல்லியது
என்றும் மறவாத நினைவுகள்

அழுது கொண்டே சேருமிடம் பள்ளிக்கூடம்
விட்டுப் பிரியும் போதும் அழவைப்பது பள்ளிக்கூடம்
9 மணி ஆனால் வருத்தப்பட்டோம்
4 மணி ஆனால் சந்தோஷப்பட்டோம்
இப்போது அந்த நாட்களுக்காக ஏங்குவதே பள்ளிக்கூடம்!

கூடி வாழ்ந்த இன்பமெல்லாம்
கோடி கொடுத்தாலும் கிடைப்பதில்லை
துள்ளி திரிந்த காலம்
பள்ளிப் பருவம்
மீண்டும் வாராப் பருவம்
நினைத்து ஏங்கும் உள்ளம்
தவியாய்த் தவிக்கும் நெஞ்சம்

மதில் சுவர்களில் கூட மாணவர்களின்
ஒலி எதிரொலிக்கும் சுவரோர
விரிசல்கள் பள்ளியின் வயதைக் குறைக்கும்
எந்த ஒரு கவலையும்
துன்பமும் இல்லாமல் வாழ்ந்த காலம்
பள்ளிக் காலம் தான்...

தரையில் விழுந்து
கைகால் உதைத்து அழுது புலம்பி
கண்ணீர் ததும்ப
அம்மாவின் முந்தானையைப் பிடித்துக்
கொண்டு
போக விரும்பாமல் அடம் பிடித்ததும்
பிரித்து அழைத்து சென்று
அமர வைத்த இடம்
முதலாம் வகுப்பறை
புரியாத எழுத்து தெரியாத முகம்
அறியாத இடம்
என புதிய உலகில்
தனிமையில் இருப்பது போல ஒரு சோகம்
அழுவது நான் மட்டுமே என்றெண்ணி
அண்ணாந்து பார்த்தேன்
அங்கே அழுதது நான் மட்டுமல்ல
என் வருங்கால நண்பர்களும் தான்
அழுகையில் தொடங்கியது தான் பள்ளிக்கூடம்

வகுப்பறையில் பாடப்படும் வாழ்த்து
முழுதாய் முடிக்கப்படாத வீட்டுப்பாடம்
முடித்து விட்டும் தண்டனை பெறும்
நண்பனின் நட்பு
பள்ளி முடிந்தவுடன் அடிக்கப்படும்
மணியின் சத்தம்
காலாண்டு, அரையாண்டு பருவ விடுமுறை
என பல நினைவுகள் கொண்டது பள்ளிக்கூடம்
மீண்டும் மீண்டும் நினைக்கத் தூண்டும்
அழகிய காலமது
வஞ்சகம் இல்லாநெஞ்சம்
கள்ள கபடம் இல்லை மனதில்
கவலைகள் இல்லா மழலையாய்
சுற்றித் திரிந்த காலமது
அன்று ரசிக்க மறந்த நாட்களை
இன்று கவிதையாய் எழுதி
ரசித்துக் கொண்டிருக்கிறேன்
நட்சத்திரங்களை எண்ணி முடிப்பதற்குள்
விடிந்துவிட்ட வானம் போல
வாழ்ந்து முடிப்பதற்குள்
முடிந்துவிட்டது பள்ளிப்பருவம்
முதுமையை எட்டினாலும் நாம்
மீண்டும் போகவிரும்பும் பருவம்
பள்ளிப் பருவம் மட்டுமே

- சு.பிரதீப் குமார்,
மூன்றாமாண்டு இளங்கலை வரலாறு

## நேர்ப்படப் பேசு

நேர்ப்படப் பேசு - பிறர்
காதுபடப் பேசு - பின்புறம்
பேசாதே - அரசின் முன்புறம் பேசு

சர்க்கார் வேலை வேண்டாம்
சாட்டையால் அடிக்கும் சட்டங்கள் போதும்
பசுமைவழிச் சாலைகள் வேண்டாம்
பாலியலில்லாப் பள்ளிகள் போதும்(நேர்ப்படப் பேசு)

உணவு கொடுக்கும் விவசாயி
உணவில்லாமல் உறங்குகிறான்
உதாசீனப்படுத்தும் அதிகாரி
உல்லாசமாய் வாழ்கின்றான்
தட்டிக் கேட்க ஆளில்லை - ஆனால்
மட்டம் தட்ட மட்டும் ஆளுண்டு(நேர்ப்படப் பேசு)

ஆட்டி வைக்கும் அரசியல்வாதி
அஞ்சாமல் இலஞ்சம் வாங்குகிறான் - பாவம்
அடிமைகள் நாம் மட்டும்
அஞ்சி அஞ்சி வாழுகின்றோம்(நேர்ப்படப் பேசு)

பல உதிரம் சிந்த
பல இதயம் மகிழ்ந்த நாட்டில்
இன்று சின்னஞ்சிறு பெண் உடல் பல
சில ஆசைப்பேய்களின் கைகளில் கதற
அதன் உதிரம் பட்டு
பாரதக் கொடியின் காவி நிறம்
இன்று கறையாகிப் போனதே
இரத்த வாடை வீசுதே(நேர்ப்படப் பேசு)

அஞ்சாத நெஞ்சங்கள் எங்கே? - இன்று
அஞ்சாமல் இலஞ்சம் வாங்கும்
அதிகாரிகள் இங்கே
போராடிக் கிடைத்த சுதந்திரம்
போராடிப் போராடியே கழிகிறதே - நீதி
என்னும் தேவதை அழிவுக் கூண்டில் நிற்குதே
பாவமடா பாரதம் அரசியல் என்னும்
பாதாளத்தின் பாசக்கயிற்றால்
கட்டப்பட்டுக் கிடக்கிறது(நேர்ப்படப் பேசு)

- க.யுவஸ்ரீ,
இரண்டாம் ஆண்டு இளநிலை வணிகவியல்

# என் அருமை அம்மா



காலால் ஏந்திய என்னைக் கற்பூரமாய் காத்தாயே
கவலை வரும் நேரமெல்லாம் கருணை மழை பொழிந்தாயே
கருப்பாய் இருந்த என்னைக் கம்பீரமாக வளர்த்தாயே
வெறுங்கையில் வந்த என்னை சோறும் பாலும் கொடுத்தாயே
வெயில் படாமல் காத்து வியர்வை சிந்த உழைத்தாயே
என்னை வெற்றி பல செய்யத் தூண்டினாயே
நான் உன்னை வெட்கப்பட விடமாட்டேன் மாறாது
வெண்கலப் பதக்கமாய் பாதுகாப்பேன் அம்மா உன்னை
முத்தாய் பிறந்த என்னை முத்தமிட்டு வளர்த்தாயே
முப்பெரும் பிறவிகள் எடுத்தாலும் நீ தான் என் தாயே
வாழையடி வாழையாக வரமெடுத்து பெற்றாய்
வானில் நிலவினைக் காண்பித்து என்னை வயிறு நிறைய வைத்தாயே
உன்னைப் போல் வேறு எந்த உயிர் உனக்கு நிகர்

- எம்.மருதமுத்து
மூன்றாமாண்டு இளநிலை கணினிப் பயன்பாட்டியல்

---

## வினா விடை

1.மா மரத்தில் இருந்து மாம்பழம் ஒன்று விழுந்தது. அதை இரண்டு பேர் பார்த்து 10 பேர் எடுத்து 32 பேர் கடித்து ஒருவர் ருசித்து பார்த்தார்கள். அவர்கள் யார்?

**விடை : கண்கள், கைவிரல்கள், பற்கள், நாக்கு**

2.முத்துவின் அம்மாவுக்கு மூன்று பிள்ளைகள். முதல் மகன் பெயர் ஜனவரி, இரண்டாவது மகன் பெயர் பிப்ரவரி, அப்பொழுது மூன்றாவது மகனின் பெயர் என்ன?

**விடை : முத்து**

3.மேலே உள்ள குருவிகள் பறந்து வந்து மலரில் அமர்கின்றன. ஒன்று ஒன்றாக அமர்ந்தால் ஒரு குருவி மீதம் இருக்க வேண்டும். இரண்டு இரண்டாக அமர்ந்தால் ஒரு மலர் மீதம் இருக்க வேண்டும். எத்தனை குருவிகள்? எத்தனை மலர்கள்?

**விடை : மூன்று மலர்கள், நான்கு குருவிகள்**

- V.நந்தகுமார்,
மூன்றாம் ஆண்டு இளநிலை வணிக நிர்வாகவியல் துறை

## இயற்கையின் அன்பளிப்பு

சில்லென்ற
பனிக்காற்றில்
சிறுசிறு
முத்துக்களாய்
உதிர்ந்திட்ட பூக்கள்...

ஒய்யாரமாய்
துள்ளி விளையாடும்
புள்ளி மான்கள்...

அலை அலையாய்
ஆர்ப்பரித்து விளையாடும்
மீன்கள்...



M.Sabitha II BCA

சிட்டாய்ப் பறந்து
பட்டாடை யுடுத்தி
பருவத் தளிர்களாய்
பளிச்சிடும் - பட்டாம்பூச்சிகள்...

இவையாவும்
இயற்கை - நமக்களித்த
ரம்மியமான - அளப்பரிய
அன்பளிப்புகள்...!

- முனைவர் சு.பொன்னையன்,
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை

---

## தற்கொலை இயலாமையின் எல்லையா?

ஆணவக் கூட்டங்கள்
ஆடுகின்றன!...
மாணவக் கூட்டங்கள்
மடிகின்றன!...
மல்லுக்கட்ட
எண்ணமில்லையா?
மறத்தமிழனின் வீரம்
தற்கொலையா?

தரணியாளவும்
திண்ணம் கொண்டு,
துணையேதும் வேண்டா
தனியே நின்று,
தாண்டவ ஆட்டம்
ஆடிக்காட்டு!...
தற்கொலை முடிவைத்
தூக்கிப் போட்டு!...

லட்சியம் ஒன்றையே
நெஞ்சில் விதைத்து
நிச்சயம் சாதிப்போம்
நிம்மதி அடைந்து,
இச்சைகள் கொண்டோரை
சர்ச்சையில் ஆழ்த்து!...
இறுமாப்புகாரர்களின்
இருதயம் கிழித்து!...
வாழ்க்கையில் அச்சம்
வரவே வேண்டாம் !...
வருத்தத்தால் நித்தம்
வாட வைக்கும் !...
வைராக்கியம் ஒன்றையே
மனதினில் கொண்டால்
தற்கொலை முடிவு
தானாய் விலகும் !...

- ப.விஜயராஜ்,
இரண்டாம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியம்

## என் உயிர் நண்பன்




இரு தாயின் கருவறையில் நாம் இருவரும் பிறந்தோம்
வகுப்பு என்னும் அறையில் வளர்ந்தோம்
நட்பு என்னும் அறையில் மலர்ந்தோம்
அன்பு என்னும் அறையில் அமர்ந்தோம்
உலகம் என்னும் பெரும் அறையில் வாழ்ந்தோம்
உயிர் என்னும் அறையில் உறைந்தோம்
மரணம் என்னும் அறையில் மறைந்தோம்
இத்துடன் வாழ்க்கை என்னும் இன்னிசைத் தென்றலை
நாம் இருவரும் இழந்தோம்...

- மு.மருதமுத்து,
மூன்றாம் ஆண்டு இளநிலை கணினி பயன்பாட்டியல்

---

## தந்தை (நாம் காணும் தெய்வம்)

தாயின் பாரமோ பத்து மாதம்
ஆனால் தந்தையின் பாரமோ
வாழ்க்கை மொத்தம்
கதிரவன் உதிக்கும் முன்பே ஓடி
காரிருள் சூழ்ந்த பின்னே
வீடு திரும்பும் மனிதன் அவன்
வெளியில் படும் இன்னல்களை
வீடு வந்ததும் மறந்து
குழந்தைகளுடன் புது இன்பம் காணுபவன்
சாப்பிட ஆரம்பிக்கும் முன்பே
பிள்ளைகள் சாப்பிட்டதா?
எனக் கேட்கும் ஜீவன் அவன்
பெண் பிள்ளையின் கதாநாயகனாகவும்
ஆண் பிள்ளையின் உற்றத் தோழனாகவும்
உயிர்த்தெழும் மனிதன் அவன்.....!!!

- கௌசல்யா கணேசன்,
இரண்டாம் ஆண்டு இளநிலை கணினி பயன்பாட்டியல்

---

## இழந்துவிடாதே

கற்கத் தவறினால் கல்வி இழப்பாய்
நேரம் தவறினால் வேலை இழப்பாய்
மதிக்கத் தவறினால் நற்பெயர் இழப்பாய்
மன்னிக்கத் தவறினால் நட்பை இழப்பாய்
நல்லறம் தவறினால் இல்லறம் இழப்பாய்
உபசரிக்கத் தவறினால் உறவினரை இழப்பாய்
சுத்தம் தவறினால் ஆரோக்கியம் இழப்பாய்
சிந்திக்கத் தவறினால் உன்னை இழப்பாய்
சிந்திக்கத் தவறாதே உன்னை இழக்காதே




- அ.அசாருதீன்,
இரண்டாமாண்டு இளநிலை கணினிப் பயன்பாட்டியல்

## துணிச்சல்

இறப்பதற்கு ஒரு நொடி துணிச்சல் போதும்
ஆனால் வாழ்வதற்கு ஒவ்வொரு நொடியும்
துணிச்சல் வேண்டும்'

- ம.பசுபதி,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## அப்பா

அப்பா இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து
பார்க்கும் போது தான் தெரியும்
"அப்பான்றது வார்த்தை
அல்ல அது வாழ்க்கை என்று"...!

- லோ.ஐஸ்வர்யா,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## நட்பு

நினைவில் வைத்துக் கனவில்
காண்பதல்ல நட்பு! மனதில் வைத்து
மரணம் வரை தொடர்வதே நட்பு!
நண்பர்கள் தவறு செய்தால்
மன்னித்து விடாதே மறந்து விடு
ஏனெனில் அவர்கள் உன் உறவுகள்
அல்ல உணர்வுகள்...
எந்த உறவை மறந்தாலும்
நல்ல நட்பை யாரும்
வாழ்நாளில் மறப்பதில்லை...

- ம.சிவா,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## நட்பு

நட்பு என்பது மூன்று எழுத்து
பாலினமோ அதற்கு இரண்டு எழுத்து
வேண்டாம் அதில் வேறு கருத்து
இறுதி வரை வருவது நட்பு
அதற்கு ஈடில்லை வேறு உறவு
சோகம் என்றால் தோள் கொடுப்பான்
மகிழ்ச்சி என்றால் கட்டி தழுவுவான்
சோர்ந்தால் உற்சாகப் படுத்துவான்
உயர்ந்து நின்றால் ஆனந்தத்தில் துள்ளுவான்
ஏன் என்று கேட்க மாட்டான்
அனைத்து நிகழ்வுகளிலும் தோழனாய் நிற்பான்
கடலில் இருப்பது உப்பு - என்
மனதில் என்றும் இருப்பது நட்பு...

- சா.பிருந்தா,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்



## அம்மா


எனக்காக வாழும் இதயமே!
உனக்காக நான் இருப்பேன்
எப்போதுமே அம்மா!
குயில்கள் கூட கூவுவதற்கு
மறந்துவிட்டது உன் குரலைக் கேட்டு
மயில்கள் கூட மயங்கி விட்டது
உன் அழுகையைக் கண்டு
நீயும் உலகில் ஒருத்தி என்று நினைத்தேன்
பின்பு தான் புரிந்தது
நீ மட்டும் தான் என் உலகம் என்று! !
தமிழில் பல்லாயிரம் வார்த்தைகள்
இருந்தாலும் கூட
உன்னைப் பற்றி வர்ணிக்க
என்னிடம் வார்த்தைகள் ஏதுமில்லை!
என் உலகமே நீதான் என் தாயே...

- மு.காவியா,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## அம்மா

இறைவன் எனக்குக் கொடுத்த
முதல் முகவரி
உன் முகம் தான் அம்மா
வயது வித்தியாசம் பார்ப்பதில்லை,
அம்மாவின் கொஞ்சலில் மட்டும்
இன்னும் குழந்தையாக...!
பத்து மாதம் சுமை, ஒரு மணி நேரம் வலி,
அனைத்தும் மறந்தாள்
குழந்தையின் முதல் அழுகை
சத்தம் கேட்டதும்... அம்மா!
துன்பங்கள் வரும் தருணம்
தாயின் மடி சொர்க்கம்...!
நான் வளரும் ஒவ்வொரு நொடியும்
உனக்கு பாரம் தான்,
தெரிந்தும் சுமக்கிறாய் பத்து மாதம்
வரை அல்ல.. உன் ஆயுள் காலம் வரை...!

- எஸ்.ஸ்ரீதர்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்



## அம்மா

இறைவனுக்கே இணையாகி வானிற்கு நிகராகி
பேரன்பிற்கு இலக்கணமானவள் இவள்
இரு ஐந்திங்கள் வலி தாங்கி
மறுபிறவி கையில் ஏந்தி ஓர்
உயிரை ஈன்றெடுக்கும் சுமை தாங்கி இவள்
பெற்ற பிள்ளைக்குப் பெயர் சூட்டி
தாலாட்டி சோறூட்டி முடிசூட்டப் போராடும்
மணிமகுடம் அணியா அரசி அவள்
ஆம் அவள் தான் நம் அன்னை!!!



S.Geetha I B.A. History

- ஆ.அபிஸ் மேத்தியு,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## காதல்

காதல் என்பது இரு மனதை மாற்றிக்கொள்ளும்
பந்தம் அல்ல... இரு குடும்பங்களை இணைத்துக்
கொள்ளும் பந்தமாகும்...
காதலிப்பவன் ஒரு போதும் கெட்டுப் போவதில்லை
எப்படிக் காதலிக்க வேண்டும் என்று தெரியாதவனே
கெட்டுப் போகிறான்...
காதல் என்பது ஒரு புத்தகம் போன்றது
படிக்கத் தெரிந்தவன் அதில் மேதையாகிறான்
தெரியாதவன் அதன் மீது போதை ஆகிறான்...

- க.கலைச்செல்வன்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## அப்பா

அப்பா ஒவ்வொரு பிள்ளையின் முதல்
நாயகன்...
அப்பாவின் கண்ணீரை இதுவரை
கண்டதில்லை...
பெற்ற தாய் என்றாவது ஒரு நாள்
சொல்லி விடுவாள்...
பத்துமாதம் சுமந்து பெற்றேன் என்று
ஆனால் அப்பா ஆயுசுக்கும்
மனதில் சுமப்பது தெரிவதில்லை யாருக்கும்!!

- ரா.உமா,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## அம்மா

அடி வயிற்றில் என் அறிவு திறக்கும் முன் என்
அழகை வர்ணித்தாயே நீ!
ஆளப் பிறந்தவனடா நீ! அழாதே என்
அறிவுக் கொழுந்தே எனக் கூறியவள் நீயே! !
இன்பமுறும் வாழ்வில் இனிய குரல்
வளம் கொண்டவன் நீ! எனக் கூறியவள் நீயே!
ஈகை வளர்ப்பதும், இன்பமுறச் செய்வது உன்
வாழ்வின் வளமடா! !

உண்ண உணவை ஊட்டி வளர்த்து என் பின்
ஓடோடி வந்தவள் நீயே!
ஊட்டி வளர்த்த பின் நான் உறங்க
ஊமையாக இருந்தவள் நீயே! !
என் ஆசையைத் தீர்க்க உன் ஆசையை
அடகு வைத்தவள் நீயே! நீயே! நீயே! ! !

- ப.வசந்த்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## பெண்ணின் அழகு



P.மோனிசா,
இரண்டாம் ஆண்டு முதுநிலை வணிகவியல்

காற்றிலே அசையும் கருமேகக் கூந்தல்!
பார்வையாலே இனிப்பூட்டும் நாவற்பழக் கண்கள் !
தென்றல் வந்து அடைக்கலம் புகும் மூச்சுத்துளைகள் !
முட்களே இல்லா ரோஜா இதழ்கள் !
அழகிய குழல்வடிவ எழுத்து அதில்
வியர்வை என வடியும் அமிர்தத்துளிகள் !
சிற்பி பிரம்மனின் விலையற்ற சிற்பம் நீ!
நிலவுக்கு வரவேற்புரை ஆற்ற வரும் வானவில்லை
வெட்கம் கொள்ளச் செய்ததடி உன் அழகு!

- செ.சந்தோஷ் குமார்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## நட்பு

நூறு நண்பர்களைத்
தேடுவதை விட, நூறு ஆண்டு
நிலைத்து நிற்கும்
ஒரு நண்பனைத் தேடு...
உன்னை உச்சத்தில் வைக்கும்
அந்த நட்பு...!
துன்பம் நேர்கையில் தோள்
கொடுப்பது நட்பு...
உடன் பிறப்பாய் எண்ணி அன்பு
காட்டுவது நட்பு...
மனஸ்தாபம் ஏற்பட்டாலும் மனம்
விட்டுப் பேசுவதே நட்பு...
எதிர்பார்ப்புகளே இல்லாமல்
இணைந்திருக்கும் ஒரு
உறவு நட்பு!

- க.தீபா,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## அம்மா

உயிருக்குள் அடைக்காத்து ...
உதிரத்தைப் பாலாக்கி...
பாசத்தில் தாலாட்டி...
பல இரவுகள்
தூக்கத்தைத் தொலைத்து
நமக்காகவே
வாழும் அன்பு
தெய்வம் அன்னை...
"உனக்கு வலி கொடுத்து
பிறந்த காரணத்தால் தானோ
என்னமோ..."
எனக்கு வலி ஏற்படும் போது
உன்னையே அழைக்கின்றேன்
அம்மா என்று...!!!

- ஆ.குழந்தை திரேஸ்,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

## அம்மா

காயங்கள் ஆறிப்போகும்
கற்பனைகள் மாறிப் போகும்
கனவுகள் கலைந்து போகும்
என்றுமே மாறாமல் இருப்பது
தாய் நம் மீது கொண்ட பாசமும்
நாம் தாய் மீது கொண்ட பாசமும்
வார்த்தைகளே இல்லாத
வடிவம்
அளவுகோலே இல்லாத
அன்பு...
சுயநலமே இல்லாத
இதயம்...
அவள் தான் அம்மா

முதலில் நான் பேசிப் பழகியதும்
உன் பெயர் தான்...!
முதலில் நான் எழுதிப் பழகியதும்
உன் பெயர் தான் அம்மா
நம்மிடம் எவ்வளவு
சொத்து இருந்தாலும்
நம் அம்மாதான் நமக்கு
பெரிய சொத்து
சுயநலமான உலகில்
சுயநலமற்ற ஓர் உறவு
அம்மா...



S.Rajathi II BBA

- D.இந்துமதி,
இரண்டாம் ஆண்டு இளநிலை வேதியியல்

---

## இந்தியா

புலமை இருந்தால் புலவனும் ஆகலாம்
பொய்ப்புரட்டு தெரிந்தால் தலைவனும் ஆகலாம்
உப்பில்லா கூழிற்குத் தவிக்குது ஒரு கூட்டம்
தப்பில்லா வாழ்விற்குத் தலைவனை வேண்டுது
மாற்றங்கள் ஏமாற்றங்கள் தாராளம்
போலி வாக்குறுதிகள் ஏராளம்
அஹிம்சை நாட்டிலும் அணுகுண்டு சோதனை
அதிலும் கண்டான் ஓர் சாதனை

துறை தோறும் முன்னேற்றம்
பெண் பாதுகாப்பில் பின்னேற்றம்
பிஞ்சிலே நஞ்சு செயல்கள் ஏன் இந்த மடமை
பஞ்சிலே நெருப்பா? யார் செய்த கொடுமை
ஆடைகளிலே வண்ணச் சாயம்
வெளுக்குது விவசாயம்
ஆசை நெருப்பூட்டி
வாழ்வின் போக்கை மாற்றி
குளிர் காயுது அங்கோர் கூட்டம்...!

- ஆ.நந்தகுமார்,
முதலாம் ஆண்டு முதுகலை தமிழ் இலக்கியம்

---

## கனவுகள்

"எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று
நீயும் பின் தொடராதே
உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு"

"இருளான வாழ்க்கை என்று
கவலை கொள்ளாதே
கனவுகள் முளைப்பது
இருளில் தான்"

- மா.ஹரிகேஷ்,
முதலாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## ஞாபகம்

கொலை ஒன்றும் பெரிதல்ல
ஒரு ஞாபகத்தை அழிப்பதை
விட..........

- ரா.ரம்யா,
முதலாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## நட்பு

உயர்ந்த இடத்தில் இருப்பவனை
உறவாக்கிக் கொள்ளுதலை விட
உறவாய்க் கிடப்பவனை உயர்த்திவிட்டு
அழகு பார்ப்பதே நட்பு...

- ச.சந்தோஷ்,
இரண்டாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## காத்திருப்பு

இமைப் பொழுதில்
முடிந்துவிடும்
இரவு
நேரமெல்லாம்
தற்போது
ஆண்டுகளாக
அகன்று செல்கிறது
காரணம்
உறக்கமின்மையா? ஏதோ
உறவுயின்மையா?

- செ.ஆர்த்தி,
முதலாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## நட்பு

இரவு நேர மழை
காற்றில் வரும் மெல்லிசை
தோள் சாய தோழி
உயிர்க் கொடுக்கும் தோழன்
தாய் மடி தூக்கம்
தூக்கத்தில் மரணம்
மரணம் வரை உன் நட்பு

- பா.திவ்யா,
முதலாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## தத்துவம்

ஒரு நல்ல மனிதனை
எந்தச் சூழ்நிலையிலும்
மோசமாக நடத்தி விடாதீர்கள்
ஏனெனில் அழகிய கண்ணாடி
உடைந்து தான்
கூர்மையான ஆயுதம் உருவாகிறது

- ரா.ரம்யா,
இரண்டாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## கல்வி

பெருமைக்காகத்
தேடிப் பெறுவது அல்ல
பெற்றதைக் கொண்டு
பெருமையைத் தேடிக் கொள்வது...

- செ.சரத்குமார்,
இரண்டாம் ஆண்டு இளங்கலை தமிழ் இலக்கியம்

## திரும்ப கிடைக்காத நாட்கள்

முதல் நாள் பள்ளி
சேர்கையில்
அம்மாவின் முந்தானையை
பிடித்து அழுத ஞாபகம்
இன்றும் மறையாத
நிலவாய் மனதில் இருக்கிறது...!
அறிமுகம் இல்லாமல் வந்து
அடிக்கடி பேசிக் கொண்டு
உறவுகளுக்கு மேல் உயிரான
நண்பர்கள்...
மறுநாள் தேர்வு என்று சொல்லிவிட்டு
அடுத்த நாள் காலை
ஆசிரியர் விடுமுறை என்ற
செய்தியைக் கேட்டதும்
வருகின்ற மனமகிழ்ச்சிக்கு
ஈடு இணையே இல்லை...
விளையாட்டு வகுப்பை
கணக்கு ஆசிரியர்
கடன் வாங்கி
நடத்தும் பொழுது
வருகிற கோபம்
சொல்லிடைக்க முடியாது...
தேர்வு நாட்களில் அந்தப் புத்தகம்
எழுதிய எழுத்தாளர்
தெரியாமல் சாபமிட
என்ன பாவம் செய்தாரோ
தெரியவில்லை...
எங்களின் வசைபாடுதலுக்கு
ஆளாகிவிடுவார்...
படித்த புத்தகங்களை விட
"அடித்த" புத்தகங்கள் தான் அதிகம் ...
ஆசிரியர் பாடம் நடத்துகையில்
சாக்லேட்டின் சுவை அதிகம் ...
போக மாட்டோம் என
தெரிந்தும் சுற்றுலாவிற்கு
திட்டம் போட்ட நாட்கள்
இனிமையானவை...
இன்னும் பல நினைவுகள்
பள்ளி நாட்களில் ...
சில நேரத்தில் கண்ணின்
ஓரம் கண்ணீர்
எட்டிப் பார்க்கிறது
பள்ளிப் பருவத்தை
நினைக்கும் பொழுது...!

- அ.திவ்யா,
முதலாம் ஆண்டு இளநிலை விலங்கியல்

## பணத்திற்கு அடிமையாகாதே

பணம் என்னும் மாயவலைக்குள்
முடங்கிக் கிடக்கும் மனித சமுதாயமே
பதவிகள் பெற்ற மனித மிருகம்
உன்னை ஆட்டிப் படைப்பது ஏன்?
பணத்தில் விழுந்து புரண்ட அது
நாட்டை அழித்தது; மக்களை வருத்தியது
பண்பட்ட சமுதாயமே! நீ பெட்டிப்
பாம்பாயிராது, பலத்த புயல் போல மாறு
பகல் கொள்ளையிட்ட குண்டு பெருச்சாளிகளை
நாட்டை விட்டே அழித்து விடு
பலம் கொண்ட புரட்சிதனை நடத்தி
நீ இந்தியரின் தலையெழுத்தை மாற்று...

- ச.சு.தனுஸ்ரீ,
மூன்றாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல்

## தன்னம்பிக்கை வரிகள்

➢முயற்சி + நம்பிக்கை + நேர்மை = முன்னேற்றம்

➢தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் மனம் தளராத பொறுமையுடன் கூடிய விடாப்பிடியும் தான் வெற்றிக்கு காரணங்கள்

➢உற்சாகமும் நம்பிக்கையும் தான்
சராசரியானவரையும்
சிறப்பான நிலைக்கு மாற்றும்

➢எடுத்த காரியத்தை முடிப்பதில் மனஉறுதி வேண்டும்
மனஉறுதியிருந்தால் உற்சாகமும், நம்பிக்கையும் எப்போதும்
நம்மிடம் இருந்து கொண்டேயிருக்கும்

➢உறுதியும், ஊக்கமும், நன்னம்பிக்கையும்
தடைகளையெல்லாம் தகர்த்துவிடும் ஆற்றலுடையது

- த.சுதா,

உதவிப் பேராசிரியர், கணினி பயன்பாட்டியல் துறை

---

1956ஆம் ஆண்டு இந்திய அச்சக நூல்களின் பதிவுச் சட்டம் விவர அறிக்கைப் படிவம் விதி 8

| | | |
|---|---|---|
| வெளியிடப்படும் இடம் | : | திருப்பூர் |
| வெளியிடப்படும் காலம் | : | ஆண்டுக்கு ஒரு முறை |
| அச்சிடுவோர் பெயர் | : | ஸ்ரீ கிருஷ்ணா டிரேடர்ஸ் |
| தேசிய இனம் | : | இந்தியர் |
| முகவரி | : | 201, மங்கலம் ரோடு, கருவம்பாளையம், திருப்பூர் - 641 604. |
| வெளியிடுவோர் பெயர் | : | முனைவர் வ.கிருஷ்ணன் |
| தேசிய இனம் | : | இந்தியர் |
| முகவரி | : | முதல்வர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |
| ஆசிரியர் | : | முனைவர் சி.அமிர்தராணி |
| இனம் | : | இந்தியர் |
| முகவரி | : | வணிகவியல் துறை இணைப் பேராசிரியர்,<br>சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் |

முனைவர் வ.கிருஷ்ணன் ஆகிய நான் இதன் மூலம் மேலே காணப்படும் விபரங்கள் யாவும் எனக்குத் தெரிந்தவரை முற்றிலும் உண்மை என நம்பகமாக அறிவிக்கிறேன்.

(ஒம்) முனைவர் வ.கிருஷ்ணன்
வெளியீட்டாளர்

திருப்பூர்
20-05-2022

## QUOTATIONS

A teacher as a person is more important than a teacher as a technician. What he is has more effects than anything he does.

- Jack Canfield

A good teacher is not simply one who imparts knowledge to his students, but one who awakens their interest in it and makes them eager to pursue it for themselves. He is a sparkplug, not a fuel price. - W.J.Berrill

Books without the knowledge of life are useless. - Samuel Johnson

Education is the ability to listen to almost anything without losing your temper or your self - confidence. - Robert Frost

Education makes people easy to lead, but difficult to drive; easy to govern, but impossible to enslave. - Henry Peter

- Compiled by S.Ammanulla Sharif, I M.A. English

## MY FIRST NCC CAMP

National Cadet Corps is the organisation controlled and headed by the Ministry of Defence. It is the largest uniformed youth organisation in the world. It was formed on July 15, 1948. NCC creates responsible citizens to our country. NCC is an incredible journey that depends upon how much a cadet learns in 3 years. Our Prime Minister Narendra Modi once said, "NCC is not about uniform (or) uniformity. It is about Unity"

The main motto of NCC is "Unity and Discipline". I feel trilled when I wear the uniform and enter the ground. It is an amazing feeling. NCC also teaches personality development, leadership, character building, patriotism, honesty and comradeship.

It was a 5 days camp filled with lots of memories. There were no competitions in this camp but it gave us the real time experience of Army Soldiers. During the training process, I learnt Drill, Co-ordination, Map reading, Judging Distance, Field Craft and Battle Craft and many more.

In the camp all the officers treated us like their own children inspite of the difference in social status and regional back ground. NCC inspired me and increased my respect for Indian Army, Navy and Air force.

- M.Rakshana, II B.Com. (CA)

## SELF CONFIDENCE

**"Appearance are deceptive**
**Never be sensitive**
**Always think positive**
**Success is assertive"**

Most of us think, "I am short, I am ugly, I am slow, I am tall" and so on. It does not matter. It is a person's inward potential that makes him succeed in life. The inner truth of a person is usually different from what is visible outside. But Self Confidence is the key to every success. There are many people who have real talent in multiple areas. And yet they never accomplish anything, because they are afraid to make the first venture. In this way good and useful things are lost in the world.

Mohammad Ali, one of the best boxers once said, "I hate every minute of training but I said Don't quit. Suffer now and live the rest of your life as a Champion!" He faced failures, demotivates etc. But he trusted himself. He worked hard for his goal. He didn't give up his self - confidence.

Pain changes people. Some become rude and some may become silent. Always choose permanent solution for your goal and not temporary. Put more hard work for your goal. Don't change your mindset, be positive, Don't waste your time. Time is precious. Every failure is a stepping stone for every person.

- M.Rakshana, II B.Com. (CA)

# NATIONAL CADET CORPS

The National Cadet Corps is one of the major youth organisations in our country. It contributes in spreading national harmony and reliability amongst youth. Its role in developing good personality, discipline, hard work and in moulding them into energetic and responsible civilians of the country has been well identified.

The NCC came into force in 1948 with a view to impart the rudimentary skills and training in handling of weapons of different types and making the cadets physically and mentally tough that they could face hardships easily.

NCC training is given to students in the age group of 13 to 26 in the school and college. It includes Army, Navy and Air force stream depending upon the aptitude of the student. The National Cadet Corps (NCC) is the youth wing of the Indian Armed Forces with its headquarters in New Delhi, India. It is open to schools and colleges on voluntary basis.

The NCC in India was formed by the Act of 1950. It can be traced back to the 'University Corps", which was created under the Indian Defence Act 1917, with the objective to make up for the shortage in the Army. NCC Directorate Uttarkhand was raised at Dehradun on 08$^{th}$ August 2006, Uttarkhand is the 17$^{th}$ NCC Directorate, the only one to be added since 1948.

NCC emphasize on (i) character building (ii) friendship development (iii) comradeship (iv) confidence (v) leadership (vi) patriotism (vii) honesty (viii) punctuality (ix) sense of readiness.

NCC has become very popular. It is the need of the hour. For this reason, the Government has made the NCC compulsory in colleges. It is always beneficial for every student to join the NCC. By doing so, he can be useful to the country and society. Each cadet has a different reason to join NCC. Some want to achieve in camps, some want to join defence and some are there for educational purposes.

Being in NCC is a new experience for me and I am filled with enthusiasm. At first I thought this wasn't my cup of tea. Later on I started enjoying each and every parade.



- CDT P.Vasanth, II B.Sc. CDF

## A Paradigm Shift from Skill based Education to Holistic Value-based Skill Education

All human beings wish to lead a happy, peaceful and comfortable life on this planet Earth. But, except for few yogis, it is highly impossible for the rest of the world to lead a harmonious life. There are so many chaos, confusions and conflicts that disturb and affect our being, relationships, society and work. Our standard of living has increased, so does the challenge at various levels like, loneliness, depression, anxiety, suicides, violence, pollution, resource-depletion, climate-change, global warming, natural calamities, human – animal conflicts and species extinction, etc. It has turned more like a Struggle and Battlefield.

There is an immediate need to work on developing human consciousness to address the above-mentioned issues. Though it seems strange, the root of all issues is the unconscious living of human beings. Unless the development of human consciousness is addressed, there will not be any sustainable solution to the problems mentioned above. We believe that whatever we do other than the development of consciousness is patchwork, addressing the symptoms of the problem only.

Basic Human aspirations are not clearly understood. Efforts are being made, but the outcomes are not fruitful, rather the problems seem to be increasing. Present day education focuses on acquiring skills but the lack of attention to a holistic perspective inadvertently leads to Self-Centric individualism which leads to Opposition, Struggle and Disharmony. As human beings, when we explore many times we come across questions like,

- "Who am I?"
- "What is the purpose of my life or existence?"
- "What am I created for?"
- "Can I lead a happy and peaceful life, in this world?"
- "Can I be happy and prosperous?"
- "Can I lead a Fulfilling Life?"
- "Why there are so many sorrows, troubles, miseries in one's life?"

To answer the above queries, we need to know the basic human aspirations - as individuals and also as a collective humanity. Once we are clear with our aspirations, then everything will fall in place on its own. For that our education should help to develop a holistic perspective, covering all aspects of living from Individual, Family, Society and Nature. Also, our Education should help in enriching Value Guided Skills. Nelson Mandela rightly said: "Education is the most powerful weapon through which you can change the world".

Education is seen as the key enabler to realise this potential. With humane education being provided to the child, the child, as he/she grows up, is able to develop a humane world vision which enables him/her to understand the human values, practice them in living and ensure fulfilment within as well as in the interactions with other human beings and the rest of nature. With this level of competence, the student is able to pick the right skills which are in coherence with the holistic world vision, learn them, practice them and utilize them for value-based living.

Now, it has become the need of the hour to make a shift from skill based to value based education.

- Value Education

↓

- Value Based Education

↓

- Skill Based Education

↓

- Skill Education with Value Based Living

Refrence

https://fdp-si.aictc-india,org/verifiedProgramDetailsList.php

https://www/youtube.com/playlist?list=PLKDfuUlbRCEbe1oJ21ih9ECA78R_I8d3-

**Dr.A.Geetha**
**Head and Assistant Professor in Computer Science**

## WHAT IS IMPORTANT FOR A STUDENT?



Not fear for a teacher but respect
Not physical attendance but mental presence
Not hearing but listening
Not acceptance but analysing
Not memorizing but understanding
Not writing but applying
Not submission of assignments but loyal work
Not exam halls but class rooms
Not scores but intelligence
Not knowing but knowing to do
Not mere certification for a degree but certificate for a career

**Dr.Jelince Dhinakar Abraham**
**Assistant Professor in Business Administration**

## THE IMPACT OF READING BRAIN

Brain is like a black box. It is a storage of thousands of information and incidents. It is one of the organs which is sometimes used and most of the times not used or underused. As the body builder exercise more; reading brain grow in size to accommodate the learning skills.

Brain works as a complex machine – muscle internet in the universe. Old generations did not realize much about what happens inside the brain while reading. But now, the humankind understood that the effects and impacts of reading which can help in unlock our remarkable power. Of course, habit of reading has power to change the humanity.

Human beings were never born to read. We were born to speak, hear, see, smell and so on. Earlier the brain was used for object recognition during hunting. When we invented the alphabet and started to read, ancient hunters became modern readers.

The impact of reading to produce network is being used to heal the troubled minds. Let me mention an example from reader's club. The club members suffered from different psychological disorders like depression. The treatment given to them is to make them read collectively a master piece and engage themselves in interaction and evaluation of events and characters. While reading the

language about the world they all know in the absolute depth of engagement and concentration, brain is expected to do more than observing information and facts. It helps to control mood disaster.

Reading could sometimes work better than any antioxidant. Reading changes the neuro circuits. Whenever we live out a drama or story inside our heads, thoughts and feelings that originated in other minds have electrifying effects on our mind. The libraries like Chikkanna Government Arts college library provide raw materials – thousands of books, countless facts, ideas and stories of other minds all packaged up waiting to be our own and used by us.

And why reading matters is, any reading is an intellectual journey guided by the author, agreeing or disagreeing to her or his views. Because human mind will evaluate everything that happens in terms of previous experiences, it enables us to navigate the world.

Finally, as the world of technology changes, our reading style changes; but it is the reading which remains a key to the wider world. Certainly reading transformed many, transforming and will transform everyone who wishes to be......

It's time to READ ! READ !! & READ !!!


**Dr.A.CHITRA DHAVAPUTHALVI**
**Librarian & Head**
**Research Department of Library and Information Science**

## TO OUR STUDENTS


Your dreams have to be BIGGER
Your ambitions HIGHER
Your commitment DEEPER
And your efforts GREATER
This is our PRAYER
For the SUCCESS
Of our dear STUDENTS




**Dr.R.Haridas**
**Assistant Professor in Business Administration**




M.Jayalakshmi, III B.A. History




K.Yuvasri, II B.Com. (A)




S.Sreekumar, III B.Sc. Maths




S.Surya, II B.A. History






S.Satham, I B.Sc. Zoology


M.Gowtham, III BCA





K.Priyanka, II B.Com. (A)

M.Sabitha, II B.C.A




S.Vanisri, II M.Sc. CDF




K.Sakthivel, III B.Sc. Maths



V.Divya, I B.C.A.




S.Karthik, III B.B.A




K.Lubisan, II BCA




M.Hariprasath, II B.B.A.




Saravanakumar, III B.B.A.




V.Niraimathi, I M.Sc. (CS)



B.Bhuvaneswari, I B.A. (History)


S.Saran, II B.Com. (A)






M.Marutha Muthu, III BCA


M.Gopinath, III B.A. History



V.Bhavani, I B.A. (History)



M.Sabitha, II B.C.A.



R.Lavanya, I B.A. History




S.Rajathi, II B.B.A.



21-04-2022 அன்று செஞ்சுருள் சங்கம் சார்பாக நடைபெற்ற தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றிய கோவை மனோஜ் க்ளினிக் ஆலோசகர் Dr.B.மனோஜ் பிரபாகர் அவர்கள்



கல்லூரி விளையாட்டு விழாவில் யோகாசனம் நிகழ்த்திக் காட்டும் இரண்டாம் ஆண்டு வரலாற்று துறை மாணவன் பூபாலன்



பாரதியார் பல்கலைக்கழகம் நடத்திய பாரதியார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான ஹாக்கி போட்டியில் நான்காம் இடம் பெற்ற எம் கல்லூரி ஹாக்கி அணியினர்



எம் கல்லூரியில் நடைபெற்ற பாரதியார் பல்கலைக் கழக B மண்டல கல்லூரிகளுக்கு இடையேயான கபாடி போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரிக்கு பரிசுகளை வழங்கிய எம் முதல்வர்





29-04-2022 அன்று நடைபெற்ற ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா சிறப்பு விருந்தினருடன் பரிசு பெற்ற மாணவர்கள்



29-10-2021 அன்று குமரன் அரங்கில் நடைபெற்ற 48ஆவது பட்டமேற்பு விழாவில் கோவை பாரதியார் பல்கலைக்கழக பதிவாளர்(பொ) முனைவர் கா. முருகவேல் அவர்களின் விழா பேருரை





2018 மற்றும் 2019 ஏப்ரல் கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்கள் பட்டமேற்பு விழாவில் சிறப்பு விருந்தினருடன்





கல்லூரியின் பட்டமேற்பு விழாவில் சிறப்பு விருந்தினர் பட்டச் சான்றிதழ் வழங்கிய போது



29-04-2022 அன்று திறந்தவெளி கலை அரங்கில் நடைபெற்ற ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழாவில் கவிஞர் கவிதாசன் அவர்களின் சிறப்புரை



ரூபாய் ஐந்து லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட மின்னணு நூலகத்தை மாணவர் பயன்பாட்டிற்காக 22-04-2022 அன்று கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்கள் திறந்து வைத்தல்



ரூபாய் 1.35 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு 28-10-2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்ட I பிளாக் கட்டிடம்